22476

முதியோர் கல்வி

(தென்னிந்திய முதியோர் கல்விச் சங்கத்தின் மாத இதழ்)

மலர் 1 | டிசம்பர் 1951 | இதழ் 5

மக்களும் - தேர்தலும்

நம் நாடு சுதந்திரம் பெற்று இன்று நான்கு ஆண்டுகளுக்கு மேல் ஆயிற்று. அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் நடைபெறப் போகும் தேர்தல், சுதந்திர இந்தியாவின் முதல் மக்கள் தேர்தல். இது உலக சரித்திரத்திலேயே கண்டறியாத மாபெரும் மக்கள் தேர்தலாகும். இந்தத் தேர்தல் மூலந்தான் இந்தியாவின் அரசியல் அமைப்பு எவ்விதம் இருக்கவேண்டும் என்பது நிர்ணயிக்கப்படும். நம் நாட்டு மக்களில் இருபத்தி ஒன்று வயது நிரம்பிய ஆண், பெண், பாமரர், பணக்காரர், பாட்டாளி, முதலாளி, எழுத்தறிந்தவன், எழுத்தறியாதவன் எல்லோருக்கும் ஓட்டுரிமை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், காலை முதல் மாலை வரையில் உழைக்கும் பாட்டாளி, இன்றைய சமூகத்திற்கு ஏழை தான்; ஏழை பாட்டாளி எழுத்தறிவு அற்றவனும் கூட.

உண்ண உணவற்று, உடுக்க உடை அற்று, இருக்க இடம் இல்லாது, பிறருக்கு உழைக்கும் உழைப்பாளியின் மகத்தான உரிமை என்னவாகும்! அவன் எழுத்தறிவு இல்லாத பாட்டாளிதான். அறிவில், உலக அனுபக்கல்வியில், ஏன்? பிறவியிலும் கூட அவன் ஏழை படியாத பாட்டாளியல்ல. எவனும் உலகில் ஏழையாக பிறப்பதில்லை. சமூகம் தான் அவனை ஏழை படியாத பாட்டாளியாக ஆக்கியது. அது மாத்திரமல்ல, அவன் உரிமைக்கே உலைவைத்தது. இன்று அவன் நிலை என்ன?

பணத்தை பரம்பரையாக கொண்டு எழுத்தறிவு பெற்றது மல்லாது, பதவி, பட்டங்களையும் அடைந்த பரம்பரையை கண்டு ஏழைப் பாட்டாளி, எழுத்தறியாவிடினும், எள்ளி நகைக்கிறான். ஏன்? அப்பரம்பரை என்றும், உழைக்க முடியாத உதாரி; சொந்த புத்தியற்ற சோம்பேரி; ஆனால் இன்று தேர்தலில் தொண்டைத் தொடாத இப்பரம்பரை, உழைப்பாளி என்ற உருவத்தில் ஏங்கி, ஒடுங்கி, கிடக்கின்ற எழுத்தறிவற்ற பாட்டாளி மக்களை தெருக்களில் வீடு தோறும் தேடுகிறார்கள். தேர்தலில் நிற்கும் எல்லோரும் இந்நிலையில் இருக்கிறார்கள் எனக்கூற நாம் ஆசைப்படவில்லை. ஆனால் இதில் அநேகர் இருக்கலாம்

பாதாளப் படுகுழியில் புதைந்து கிடந்த ஏழை எழுத்தறிவற்ற பாட்டாளி மக்களுக்கு இத்தேர்தலில் புத்துயிர் தந்த நம் காங்கிரஸ் மத்திய அரசாங்கத்தை நாம் மனமார வாழ்த்துகின்றோம். ஆனால், அரசாங்க தேர்தல் சட்டதிட்டங்கள் அடங்கிய அறிக்கைகளையோ அல்லது பத்திரிகை வாயிலாக படித்து தெரிந்து கொள்ளக்கூடிய படியாத ஏழைப்பாட்டாளி எவ்விதம் எங்கு, யாரிடம் தெரிந்து கொள்ள முடியும்? அரசாங்க சிப்பந்திகளிடமோ அல்லது அரசியல் வாதிகளிடமோ தெரிந்து கொள்ளலாம் என ஓர் சிலர் சொல்லக்கூடும். சரி, அப்படித்தான் வைத்துக் கொள்வோம். என்றும் நாட்டில் கண்டறியாத முதல் இந்த மாபெரும் நம் மக்கள் தேர்தலில் நம் ராஜ்யத்தில் சுமார் $2\frac{1}{2}$ கோடிக்கு மேல் வாக்காளர்கள் இருக்கிறார்கள். இதில் எழுத்தறியாத மக்கள் பலர் பங்கு கொள்ளப் போகிறார்கள். அரசாங்கம் வாக்காளர்கள் எல்லோரும் பங்கு கொள்ளவேண்டும் என்ற விருப்பத்தினால் 750 வாக்காளர்களுக்கு ஓர் "ஓட் சாவடி" அமைக்க

ஏற்பாடு செய்ய திட்டமிட்டிருக்கிறது. அரசாங்க சிப்பந்திகள் இம்மாபெரும் தேர்தலில் சரிவர திறம்பட நடைபெற வேண்டும் என்ற எண்ணத்தால் தேர்தல் சட்ட திட்டங்களில் பயிற்சியும் இப்பொழுதுதான் அவசர அவசரமாக கொடுக்கபபட்டு வருகிறது. இப்பயிற்சி பெற்ற பெரும்பாலருக்கு இத்தேர்தல் சட்ட திட்டங்களை புரிந்துகொள்ளா முறையில் இருக்கிறார்கள். எனவே, இவர்கள் ஏழை படியாத பாட்டாளி மக்களிடத்தில் நெருங்கி பழகின போதிலும் எல்லோருக்கும் விளக்கி சொல்ல முடியாது.

பல்வேறு கட்சியை சேர்ந்த அரசியல் வாதிகள் தங்கள் கொள்கைகளையும், திட்டங்களையும் பிரசாரம் செய்து வருகின்றனர். ஒவ்வொரு அபேட்சகர்களும் வெற்றி பெற பல சூழ்ச்சிகளை அரசாங்கம், அக்கம் பக்கம் தெரியாமல் செய்ய துணிவு கொள்வார்களே ஒழிய, தேர்தல் சட்ட திட்டங்களை விளக்கி ஏழை எழுத்தறிவில்லா பாட்டாளியை சிந்திக்க விடமாட்டார்கள்.

எனவே, ஓட்டுரிமையுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையை சிந்திப்போமானால் நூற்றுக்கு சுமார் எண்பதுக்குமேல் ‘ஓட்டுரிமை’ என்னவென்று அறியாமலும், அரசியல் கட்சியின் அபேட்சகர்களின் திட்டங்களையும், அரசாங்கத்தின் சட்டதிட்டங்களையும் படித்து தானே தெரிந்துகொள்ள முடியாதவர்களாக யிருக்கின்றார்கள் என்றால் இதைவிட இந்நாட்டுக்கு கேவலம் வேறு என்ன வேண்டும்?

சென்ற ஆண்டு இங்கிலாந்தில் பொது தேர்தல் நடந்தது என்பது நமக்கு தெரியும். அந்நாடு நம் நாட்டைவிட சிறிய நாடாக விருக்கலாம். ஆனால் அவர்கள் தேர்தல் நடத்தும் முறையில் பயிற்சி பெற்றதினால் நம்மை விட சிறந்தவர்கள் என கருத வேண்டும். ஓட்டுரிமையின் அவசியத்தை பல ஆண்டுகள் பிரசார பலனால் இன்று அந்நாட்டில் 100-க்கு 100 விகிதம் வாக்காளர்கள் தங்கள் வாக்கு உரிமையை தாங்கள் விரும்பும் கட்சியின் நபர்களுக்கே வழங்கியிருக்கின்றனர். நம் நாட்டிலோ பொதுத்தேர்தலில் 21 வயது மேற்பட்ட எல்லோருக்கும் வாக்குரிமை உண்டு என்று இன்றுதான் அதுவும் படித்த ஒரு சிலருக்கு தெரிந்திருக்கிறது. ஆகையால் அரசியல் வாதிகளின் சட்ட விரோதமான சூட்ச்சிகளுக்கு பலர் பிடிபட்டு தங்கள் உரிமையை இழப்பார்கள். அதனால் ‘ஜனநாயகம்’ என்ற பெயரால் நடத்தப்படும் இத்தேர்தலில் மக்களின் சார்பாக, மக்களின் பிரதிநிதி, மக்களின் ஆசையாலும், ஆதரவாலும், அன்பாலும் தேர்தல் பெற வேண்டுமே ஒழிய சூழ்ச்சியால் மக்களை ஏமாற்றி வருவதற்கு அரசாங்கம் இடம் அளிக்கக் கூடாது. இதில் அரசாங்கம் தீவிர கண்காணிப்பு வேண்டும்.

தோட்டி முதல் தொண்டைமான் வரையிலும், பாமரர் முதல் பணக்காரர் வரையிலும் ஆண் பெண் அடங்கலாக 21 வயது நிரம்பியுள்ள ஒவ்வொரு தமிழனுக்கும் தமிழகத்தில் ஓட்டுரிமை அரசாங்கம் அளித்திருப்பதை நாம் முன்னமேயே வாழ்த்தினோம். அதுனுடன் மட்டுமல்லாது குறைகளையும் எடுத்துக் காட்டினோம். இக்குறைகளுக்கு காரணம் எழுத்தறிவு எல்லோருக்கும் பாலர் முதல் விருத்தர் வரையில் அவசியம் என்று எடுத்துக் காட்டினோம். அது இன்று அல்ல 12 ஆண்டுகளாக கூறி வந்ததைத்தான் திரும்பத் திரும்ப கூறி வருகிறோம்.

அன்னிய ஆட்சியில் அரைகுறையாக அளித்த அவலட்சணமுள்ள அரசியல் வாதிகளின் கல்வித் திட்டத்தை கழிக்கவேண்டும்; அன்றும் சொன்னோம்; நம் நாடு சுதந்தரம் பெற்றதும் சொன்னோம்; இன்றும் சொல்லுகின்றோம். ஆனால் நாட்டையாளும் நாம் எதைக் காண்கிறோம்; பழைய பஞ்சாங்கம். படித்தோர் சிலருக்கு சலுகை என்பதைத்தான் காண்கிறோம். அன்று ஆண்டவன் பெயரால் அளித்த படிப்பை இன்று மக்கள் பெயரால் கேட்கின்றோம்; இதை விரும்புவோர், அன்று ஓர் சிலரே, இன்று சிறியதளவு அதிகமிருக்கலாம்.

காந்திஜியின் நிர்மாண திட்டத்திலே முக்கியத்துவம் பெற்ற முதியோர் கல்வி, மூலையிலே கிடக்கின்றது. அரசியல் வாதிகள் அதை எதிர்க்கின்றார்கள். பணக்காரர் பகைக்கின்றார்கள். முதலாளிகள் முணுமுணுக்கின்றனர். படித்த, பட்டம் பெற்றவர் இதற்கு எதிர்ப்பு. ஆனால் ஆண்மைகொண்ட ஓர் சிலர் ஆதரவளிக்கின்றார்கள்.

நம் மத்திய அரசாங்கம், ஒருவாறு காந்திஜி கட்டளைக் கிணங்க நம் சுதந்திர நாட்டின்

முதல் கல்வி மந்திரி மௌலானா அபுல் கலாம் ஆஸாத் இவ்வியக்கத்திற்கு அதிக அக்கரை காட்டியது மல்லாது கட்டளையுமிட்டார். நம் ராஜ்ய அரசாங்கங்களுக்கு கட்டளை காலா காலத்திலே பொருள் நெருக்கடியால் நடைபெறாது என்ற எண்ணத்திலேயே தன்னால் கூடியவரையில் பொருளுதவியும் செய்ய தலைப்பட்டார். இது இன்று மூன்று ஆண்டுகள் ஆயின. இவ்வுதவியைப் பெற்ற பல ராஜ்ய அரசாங்கங்களிலே நம் சென்னை ராஜ்யம் ஒன்று.

நம் சென்னை மாகாணத்திற்கு சுமார் 6 லட்ச ரூபாய்க்குமேல் கொடுத்தும், அதே மாதிரி தொகையை கொடுக்கப்பட வேண்டுமென்று கட்டளையிட்டு திட்டம் வகுக்கும்படி நம் மாகாண அரசாங்கத்தை கேட்டுக்கொண்டார். அதன் யலனாக நம் அரசாங்கத்தில் 6 லட்ச ரூபாய் சென்ற வருட திட்டத்திலே ஒதுக்கப்பட்டு ஓர் திட்டமும் வரையறுக்கப்பட்டு இருக்கின்றது. ஆனால் அத்திட்டம் எவ்வாறு நடைபெறுகின்றது என்பது எங்களுக்கும், தமிழகத்தில் முதியோர் கல்வியில் அக்கரை கொண்டவர்களுக்கும் தெரிவதற்கு சந்தர்ப்பமளிக்காமல் இருக்கின்றனர்.

இன்று 2566 முதியோர் கல்வி நிலையங்கள் நம் ராஜ்யத்தில் இருக்கின்றது என்று நம் அரசாங்க அறிக்கை ஒன்று கூறுகின்றது. அதில் 1936 முதியோர் கல்வி நிலையங்கள் ஸ்தல ஸ்தாபனங்களால் நடைபெறுகின்றன என்று சொல்லப்படுகின்றது. இவைகள் பெருவாரியாக ஆறு மாதங்களுக்கு முன்புதான் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. மற்ற நிலையங்கள் அரசாங்க நன்கொடையுடன் தனி நபர்களாலும், சங்கங்களாலும் நடைபெறலாம். இவைகளில் உழைக்கும் தொண்டர்கள் அனேகமாக காலையிலிருந்து மாலை வரையில், குழந்தைகளின் ஆரம்ப பள்ளியின் ஆசிரியர்களாகவே இருக்கின்றனர். மாலையில் அலுத்து, ஓய்ந்து வரும் இவர்கள் இரவிலும் முதியோர் கல்வி நிலையங்களில் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. முதியோர் கல்வி நிலையங்களுக்கு வரும் முதியோர்களும் அலுத்து, ஓய்ந்து வருகின்ற ஏழை பாட்டாளிகள் பகலில் பிள்ளைகளுக்கு உழைக்கும் ஊழியன் இரவில் தன் மனம், பழக்கம், வழக்கம், நடை, பாவனை எல்லாவற்றையும் திருத்தி அமைத்துக் கொள்ள வேண்டியவனாக இருக்கிறான். முதியோர்களின் மனோபாவத்தை ஒட்டி நடக்க வேண்டியிருக்கிறது. இத்தொண்டிற்கு முதியோர் கல்வி முறையில் அரசாங்க பயிற்சி பெற்று இருந்தால் மாதத்துக்கு இரவில் எண்ணை மற்ற செலவுகளுக்கு ரூ. 4 ஊதியம் ரூ. 8 அரசாங்கம் கொடுத்துவருகின்றது. பயிற்சி பெறாத தொண்டர்களுக்கு இரவு நேரங்கள் இத்தொண்டை மேற்கொண்டால் ரூ. 4 எண்ணை மற்ற செலவுக்கும் ரூ. 5 மாத ஊதியமும் அரசாங்கம் கொடுக்கின்றது. காலை 8 மணி முதல் இரவு 9 மணி வரையில் ஓயாது உழைக்கும் ஓர் தொண்டனுக்கு இன்று முப்பது நாட்கள் சலியாது உழைத்தால் நாள் ஒன்றுக்கு ரூ. 1/8 வீதம் கிடைப்பது அரிதாக இருக்கிறது. இதை பன்முறைகள் நாங்கள் அரசாங்கத்திடம் முறையிட்டிருக்கிறோம். அதற்கு இதுவரை செவி சாய்க்கவில்லை என்பதை சொல்ல வருந்துகிறோம். இதுமாத்திரமில்லாது சலியாது பாலர் முதல் விருத்தர் வரையிலும் உழைக்கும் உண்மை ஊழியன் ஆரம்ப ஆசிரியனுக்கு, ஆசிரியர் தொகுதியில் "வாக்குரிமை" மறுத்துப்பட்டிருக்கிறது. மாக்களை மக்களாக ஆக்கும் இப்பெரியார்களுக்கு இந்த கேதி வந்திருந்தால் மற்ற பாமர பாட்டாளிக்கு என்னவாகும் என்பதை சிந்திக்கவும்!

இப்பெரிய மாகாணத்தில் பதிவு செய்து கொண்ட வாக்காளர்களில் நூற்றுக்கு எழுபத்தைந்து விகிதமாவது எழுத்தறிவு இலா மக்களாக இருப்பார்களென்று நினைக்கிறோம். அரசாங்கத்தார் உதவி கொண்டு இன்று 2566 முதியோர் கல்வி நிலையங்களில் சராசரி 10 விகிதம் ஓர் நிலையத்திற்கு முதியோர்கள் வருகின்றார்களென்று வைத்துக் கொண்டாலும் 25,660 முதியோர்கள்தான் பயில வரமுடியும். இதைத் தவிர தென் ஆற்காடு ஜில்லாவைப் போன்ற சில ஜில்லாக்களில் எழுத்தறிவிப்பு நிலையங்கள் பல அரசாங்க உதவியின்றி நடைபெற்று வருகின்றன. இவ்வளவும் நடந்து இன்றைக்கு மக்கள் எழுத்தறிவின் அவசியத்தை உணராமலிருப்பது பிரசாரமில்லாத காரணத்தால்தான்.

(2-வது ரேப்பரில் பார்க்கவும்)

முதியோர் கல்வி

ஏ. ஜி. வில்வராய்

முதியோர் கல்வி மக்களின் மனதிலுள்ள குறுகிய வரம்புகளைத் தகர்த்தி யாதும் ஊரே, யாவரும் கேளிர் எனும் உண்மை உணர்ச்சியை உள்ளத்தே எழச்செய்வது, யுத்தம் மக்கள் மனதில் உதிப்பது ஆதலால் அவ்விடத்தே சமாதான மதிலை உறுதிபடுத்துவது; அறியாமையெனும் அந்தகாரத்துள் அறிவுச்சுடர் புகுத்துவது; பாமர மக்களின் வாழ்க்கைத்தரத்தை உன்னத நிலைக்கு உயர்த்துவது; முகத்திரண்டு புண்ணுடையோரை கண்ணுடையோராக்குவது.

இஃது வளர்ந்தோர் கல்வி, வயது வந்தோர் கல்வி, முதியோர் கல்வி, அடிப்படைக் கல்வி (Fundamental Education), எனவும் பொருள்படும். இது முதியோர்களது வாழ்க்கைக்கு ஆதாரமான அடிப்படைக் கல்வி. முதியோர் கல்வியில் சமூகக் கல்வி ஒரு பகுதி. சமூகக் கல்வி பாமர மக்களிடையே அன்பு நிலவ ஏதுவானது. ஆகவே குடியாட்சி பெற்ற நாடுகள் முதியோர்பால் பரபரப்புடன் சமூகக் கல்வியைப் பரப்புவது இயல்பு. ஆனால் தனி முதியோர் கல்வி வரம்பற்றது, வாழ்நாள்வரை அறிவளிப்பது. எத்துறையில் அறிவு விருப்பமோ அத்துறையில் யாருக்கும் மேன்மேலும் அறிவூட்டுவது.

இனி முதியோர்பால் அடிப்படைக் கல்வியை (Fundamental Education) ஆராய்வோம். இது எழுத்தறிவு, பிற அறிவென இரு பிரிவுகொண்டது. எழுத்தறிவு பிற அறிவிற்கு ஆதாரமானது. பிற அறிவெனும் பொது அறிவே குறிக்கோளாயினும் எழுத்தறிவு கலந்த பிற அறிவு பொன்மலர் மணமுடைத்து. உலகம் ஓடும் வேகத்தில் வெறும் எழுத்தறிவோ, அது கலவாத ஏனையறிவோ பாமர மக்கட்குப் போதிய பயன்தர மாட்டாது. ஆக, எழுத்தறிவும் வாழ்க்கைக்கான பிற அறிவும் பிணைந்ததே முதியோர் கல்வி.

எழுத்தறிவு

சுய கல்வி (Auto Education) க்கு எழுத்தறிவு இன்றியமையாதது. இந்தியாவில் தொன்றுதொட்டு கேள்வியறிவே, பாமர மக்கள்பால் பெரிதும் பரவியது. காகிதமும் அச்சுப் பிரதிகளும் மலிந்துகிடக்கும் இந்நாளில் துரித போக்கு வரத்து வசதி மிகுதியால் எழுத்தறிவிற்கு அவசரமேற்பட்டிருக்கிறது. வதந்தியைவிட எழுத்துப்பிரதி திருந்த விளக்கவல்லது. எழுத்துப் பிரதி ஓய்ந்த நேரத்தில் தனித்துச் சிந்திக்க ஏதுவானது. அறிவு ஓங்கி வளரும் இந்நாளில் எழுத்தறிவில்லாதார் அதில் ஓர் அளவும் தனித்துப் பின்பற்ற வகையின்றி மனத்தேக்கம் அடைவர். எழுத்தறிவில்லாதவர்கள் நிறைந்த பேட்டையில் கொள்ளையும் நோய்களும் மரிப்பும் உயர்கின்றன.

முதியோரது எழுத்தறிவின்மை அடிமை மனப்பான்மைக்கு அடிப்படையானது; புரளிகளையும் மிகைபடப் பெருகிய செய்திகளையும் வளர்க்க வல்லது; மக்கள் கேட்டதை நம்பும் பேதைகளாக்க வல்லது; சுயமாக யோசிக்கவோ ஒரு சிக்கலான பிரச்சனையின் இரு திறப்பட்ட நுண்ணிய பாகங்களைத் தனித்துச் சீர்தூக்கிப் பார்க்கவோ சக்தி குன்றச் செய்கிறது; சிறூர் கல்விக்குத் தவிர்க்கத் தக்க தடையாகிறது; சமூக முன்னேற்றத் தீவிரத் திட்டங்களை வேகங்கொள்ள இயலாமற் போகச் செய்கிறது; குடியாட்சியை அர்த்த மற்றதாக்குகிறது.

எழுத்தறிவு வாழ்க்கையில் இடப்படும் பல சந்தர்ப்பங்களைத் தவிர்க்க உதவுகிறது. தெருவின் பெயரையோ, பாதையில் ஆங்காங்கு அனுசரிக்கவேண்டிய விதிகளையோ, கடைகளின் பெயர்களைக் காட்டும் பலகைகளையோ சுவரொட்டி விளம்பரங்களையோ, பிரயாணச் சீட்டுகளையோ, புகைவண்டித்தொடர் கால அட்டவணைகளையோ, அச்சிட்ட நிகழ்ச்சி நிரல்களையோ, துண்டுப் பிரசுரங்களையோ, புட்டி, டப்பி முதலியவற்றின்மேல் எழுதி ஒட்டி இருக்கும் விபரங்களையோ, கடிதங்களையோ, சட்டக் காகிதங்களையோ, விலைப் பட்டிகளையோ, மற்றும் வியாபாரக் காகிதங்களையோ, பிறவற்றையோ வாசித்தறிய எழுத்தறிவு வேண்டும். தினசரிச் செய்திகளை ஓய்ந்த நேரத்தில் வாசிக்கவோ ஓய்ந்த நேரத்தைப் பயனுடன் கழிக்கவோ, பிறர் எழுதிச் சென்ற கருத்துக்களைத் தனித்து உணரவோ, தான்மேற்கொண்ட முயற்சியில் பிறர் பெற்ற அனுபவத்தை நூல் மூலம் அறியவோ நோயை மறந்திட வாசிக்கவோ முன்னாள் முன்

னேற்றதை விளக்கவோ, கைத்தொழில் அபிவிருத்திக்கான தத்துவங்களை வாசித்துத் தெளிவுபெறவோ முதியோருக்கு எழுத்தறிவு வேண்டும்.

நிரந்தர எழுத்தறிவுபெற முதியோர்களுக்கு நாற்பது முதல் அறுபது தினங்களுக்குள் செய்துவிடலாம். குறுகிய காலத்தில் எழுத்தறிவு பெற முதியோர்க்கெனத் தனி முறையுண்டு. இளைஞர்களுக்கான முறைக்கு மாறுபட்ட இந்நூதன முறை உலகில் பல விடங்களில் சோதிக்கப்பட்டுக் கையாளப்பட்டு வருகிறது.

பாமர முதியோர் நிலை

முதியோர்க்குத் தாம் வசிக்கும் பிரதேச மொழியில் பேசப்படும் பதங்கள் பற்பல தெரியும். அவைகளைக் கேட்டுப் பழகியதால் பேச்சில் நன்கு கையாளுதல்கூடும். அவர்கள் வாழ்க்கையின் மூலமும் மரபு மூலமும் அறிவு பெற்றவர். ஞாபகசக்தியில சிறுர்களுக்குப் பின்வாங்கியவர்; சிறுர்களைவிடப் பன்மடங்கு நன்கு தர்க்கிக்க வல்லவர்; அதிநுட்ப உணர்ச்சி வாய்ந்தவர்; எழுத்தறிவின்மையால் தாழ்வு சிக்கலில் ஆழ்ந்து எளிதில் மனத்தளர்ச்சியடைபவர்; வாழ்க்கையின் கொடுமையால் வெகுவில் சுய முன்னேற்ற மனப்பான்மை கொண்டவர்; இந்திய நாட்டில் இவர்கள் பெரிதும் கடின உழைப்புடன், பற்ரு உணவும் கிடைக்கப்பெற்றவர்; வெயில் கடுமையால் அலுத்துக் கிடப்பவர்; மாலேயும் இரவும் தவிர மற்ற நேரங்களில் ஓய்வற்றவர்; எழுத்தறிவின்மையால் எத்துறையிலும் சீர்திருத்தங்களுக்கு ஆதரவளிக்க முன்வரத் தயங்குபவர்; சிறுர் போலன்றி பெரியோர்களாக நடத்தப்பட விரும்பியவர்; புத்தகம் படிக்கத் தெரியாவிடினும் தன்னை அணுகும் தொண்டரது இயல்பைச் சடுதியில் தெரிந்துகொள்ளும் திடமாண்புடையவர்; உற்சாகமற்றவர்; அனுதாபமும் உற்சாகமும் பொருந்திய நண்பருடன் பழக விரும்பியவர்; படிக்கக் கற்கவேண்டுமென விருப்பம் கொண்டபோதிலும் வயது கடந்து கற்க நாணங்கொண்டவர்.

முதியோர் போதன முறை முக்கியக் குறிப்பு

முதியோருக்குப் போதிக்கப் புகும் ஆசிரியர் வசிகாமுள்ள தோற்றமும், அன்பு நிறைந்த இருதயமும், முதியோருக்கு உதவி புரிய உண்மை ஆர்வங்கொண்டவராயும் இருத்தல் வேண்டும். அதிகாரதோற்றத்தைத் தவிர்க்க வேண்டும். அவரது குரல் பள்ளி ஆசிரியர் குரல்போலன்றி நண்பருக்குப் பொருந்தியதாக இருத்தல்வேண்டும்; கற்கும் முதியோரது குரல் அளவிற்குத் தாழ்ந்திருத்தல் அவசியம். "தப்பு" என்று சொல்வதற்கு பதில் "சரி" என்று சொல்லி உடனே திருத்தமான விடையைச் சொல்வதே உற்சாக முறை. கற்கும் முதியோர் அடைந்த தேர்ச்சி சிறியதேயாயினும் ஆசிரியர் அவ்வப்போது அதிசயங் கலந்த ஆனந்தமடைந்த தோற்றங் கொள்வது நலம். அதிருப்தித் தோற்றம் அறவே நீக்கப்படவேண்டும். கற்போர்பால் (தீட்டாத) வைடூரியத்தைக் கண்டுள்ளதாக—எதிர்பாராத திறனைக் கண்டு விட்டதாக—தோன்றுவது பயன் தரும். கற்போர் எதில் ஊக்கங்கொண்டிருக்கின்றனரோ அதில் ஆசிரியரும் ஊக்கங் காண்பித்து அவர்பால் நட்பாடுதல் சாலவும் நன்று. கற்பிக்கும்போது அவசியமற்ற தேக அங்க அசைவுகளைத் தன்பால் தவிர்க்க வேண்டும். சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லவைத்தல் முதியோர்க்குப் பிடித்தமானதல்ல தெரியாததைக் கேட்டு அவமானப் படுத்துதல் ஆகாது. முதியோர் ஓர் விடையளிக்க முடியாமற்போனல் அதைச் சொல்லி மேற்சொல்லுதல் நன்மை பயக்கும். பள்ளி வகுப்பு அடக்குமுறை முதியோரிடம் பயன் தராது. சிறு பிழைகளைச் சுட்டிக்காட்டா திருத்தல் நல்லது. முதலில் சுறுசுறுப்பாயுள்ள நபருக்குப் போதித்தால் பின் பயிலுவோருக்குக் கற்றல் எளிதென உற்சாகமளிக்கும். முதியோர் அளித்த பதிலே ஆசிரியர் மறுமுறை சொல்லும் பழக்கம் பயனற்றது. பாடத்தை நேரே ஆரம்பித்துத் துரிதத்தில் — சுமார் பதினைந்து நிமிடங்களில்—முடித்துத் திருப்தி நிறைந்த தோற்றத்துடனிருத்தல் போதன முறைக்கு உதவியாகும். ஒரு பாடத்தை முடித்ததும் அதை வீட்டிற்கு எடுத்துச் செல்லவும் பிறருக்குப் போதிக்கவும் தூண்டுதல் நலம். கற்ற பாடத்தை மற்றொருவருக்குக் கற்பித்தால் மறுமுறை கற்ற பலன் எதிர்பார்க்கலாம்; வெரும் மாணவனுகவின்றி ஆசான் ஆனேம் எனும் குதூகலம் உண்டாகும். சுயநலம் சுருக்கிப் பிறநலம் பெருக்

(2-வது ரேப்பரில் பார்க்கவும்)

தேர்தல் (எலக்ஷன்) சம்பந்தமான புதிய சட்டங்கள்

இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படி இந்திய யூனியன் பூராவுக்கும் சட்டம் செய்ய அதிகாரமுள்ளது இந்திய 'பார்லிமெண்ட்' என்பது.

(1) மக்கள் சபை (House of the People).

(2) ராஜ்யங்களின் சபை (Council of States).

(3) ஜனாதிபதி (President) இவர்கள் அடங்கியது. ஜனாதிபதி அவர்களையும் ராஜ்யங்களின் சபை அங்கத்தினர்களையும் பொதுமக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுப்பதில்லை. ஆனால், 'மக்கள் சபை (House of the People) என்ற மிக்க சக்தி வாய்ந்த சபையின் அங்கத்தினர்கள் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்கள். தவிர ஒவ்வொரு ராஜ்யத்திலும் உள்ள சட்ட சபைகளின் அங்கத்தினர்களும், அரசியல் அமைப்புச் சட்டத்தில் கண்டபடி தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்கள். இவ்விதம் பார்லிமெண்டின் மக்கள் சபைக்கும ராஜ்யங்களிலுள்ள சட்ட சபைகளுக்கும் ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு அங்கத்தினர்கள் உண்டென்றும், எவ்வளவு தொகுதிகளாகப் பிரிக்கப்பட வேண்டுமென்றும், யார் ஓட்டுக்கொடுத்துப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும் நிர்ணயம் செய்து, தேர்தல்கள் நடத்துவதற்காக இந்தியப் (தாற்காலிக) பார்லிமெண்டால் 1950-ல் ஜனப் பிரதிநிதிச் சட்டம் (The Reperesentation of the people Act 1950) என்று ஒரு சட்டம் இயற்றப் பட்டது.

இச்சட்டப்படி இந்திய யூனியன் பார்லிமெண்டின் 'மக்கள் சபை' (House of the People) யில் அடியில் கண்ட எண்ணிக்கைப்படி ஒவ்வொரு ராஜ்யமும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுத்து அனுப்பவேண்டும்.

A. ராஜ்யங்கள்		பார்லிமெண்ட் அங்கத்தினர்கள்
1. அஸ்ஸாம்	...	12
2. பீஹார்	...	55
3. பம்பாய்	...	45
4. மத்திய பிரதேசம்	...	29
5. மதராஸ்	...	75
6. ஒரிஸா	...	20
7. பஞ்சாப்	...	18
8. உத்தரப்பிரதேசம்	...	86
9. மேற்கு வங்காளம்	...	34

B. ராஜ்யங்கள்		பார்லிமெண்ட் அங்கத்தினர்கள்
1. ஹைதராபாத்	...	25
2. காஷ்மீர்	...	6
3. மத்திய பாரத்	...	11
4. மைசூர்	...	11
5. பாடியாலா யூனியன்	...	5
6. ராஜஸ்தான்	...	20
7. சௌராஷ்டிரா	...	6
8. திருவாங்கூர் - கொச்சி	...	12

C. ராஜ்யங்கள்		பார்லிமெண்ட் அங்கத்தினர்கள்
1. அஜ்மீர்	...	2
2. போபால்	...	2
3. பிலாஸ்பூர்	...	1
4. குடகு	...	1
5. டில்லி	...	4
6. ஹிமாசலப் பிரதேசம்	...	3
7. கட்ச்	...	2
8. மணிபூர்	...	2
9. திரிபுரா	...	2
10. விந்திய பிரதேசம்	...	6
11. அந்தமான் நிகோபார் தீவுகள்	...	1
	மொத்தம்	496

இச் சட்டத்தில் ஒவ்வொரு ராஜ்யத்திலுள்ள கீழ்ச் சட்டசபை, மேல் சட்டசபை இவைகளுக்கு மொத்த அங்கத்தினர்கள் எவ்வளவு என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

சென்னை கீழ்ச் சபை (Legislative Assembly) க்கு 375 அங்கத்தினர்கள் இருப்பார்கள்.

சென்னை மேல் சபை (Legislative Council) க்கு 72 அங்கத்தினர்கள் இருப்பார்கள். (இவர்களுள் ஸ்தல ஸ்தாபனங்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்கள் (Local authority) Constituency) 24; கல்விப் பட்டதாரிகளால் (Graduates Constituency) தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்கள் 6; உபாத்தியாயர்களால் (Teachers' constituency) தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்கள் 6 கீழ்ச் சட்டசபையால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்கள் ,24; விசேஷ யோக்கியதைக்காகக் கவர்னரால் நியமிக்கப்பட வேண்டியவர்கள் 12; ஆக 72).

இவ்விதம் இச்சட்டத்தால் இந்திய பார்லிமெண்ட் சபைக்கும் ராஜ்யங்களில் ஒவ்வொரு சட்ட சபைக்கும் மொத்த அங்கத்தினர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. மேற்கண்டபடி பிரதிநிதிகள் தேர்ந்தெடுப்பதற்காக, ஒவ்வொரு மாகாணத்தையும் (ராஜ்யத்தையும்) தனித்தனித் தொகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு தொகுதிக்கும் எவ்வளவு பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும், ஒவ்வொரு தொகுதியிலும் பிற்போக்குப் பிரதிநிதிகளுக்காக எவ்வளவு ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறதென்றும் விவரமான நிர்ணயம் செய்து உத்தரவு பிறப்பிக்க ஜனாதிபதி அவர்களுக்கு அச்சட்டத்தின் 6, 9 செக்ஷன்களின்படி அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் உத்தரவு பிறப்பிக்குமுன் ஜனாதிபதி அவர்கள் 'தேர்தல் கமிஷன்' Election Commission) என்ற ஸ்தாபனத்தைக் கலந்துகொள்ளவேண்டும். ஜனாதிபதி அவர்களால் செய்யப்படும் உத்தரவு பார்லிமெண்டுக்குச் சமர்ப்பிக்கப்படும். அப்படி சமர்ப்பிக்கப்பட்ட 21 தினங்களுள் அதில் ஏதாவது மாறுதல்கள் செய்ய வேண்டுமானாலும் செய்ய, பார்லிமெண்டுக்கு அதிகாரம் உண்டு. இதை அனுசரித்து இப்பொழுது ஜனாதிபதி அவர்களால் ஒவ்வொரு ராஜ்யத்தைப் பற்றியும் தனித்தனி உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. சென்னை ராஜ்யம் சம்பந்தப்பட்ட வரையில் சென்னைப் பார்லிமெண்ட் சட்டசபை தொகுதி நிர்ணய உத்தரவு 1951 (The Delimitation of Parliamentary and Assembly, Constituencies - Madras - Order 1951) என்ற உத்தரவு ஜனாதிபதி அவர்களால் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. S. R. O. 706 C. 18–5–1951 தேதியுள்ள இந்தியா கெஜட் விசேஷ வெளியீடு பாகம் II–செக்ஷன் 3 பக்கம் 671) இந்த உத்தரவின்படி சென்னை ராஜ்யத்திலுள்ள தமிழ் ஜில்லாக்கள் சம்பந்தப்பட்ட வரையில் கீழே கண்டபடி தொகுதிகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தொகுதிக்கும் எத்தனை ஸ்தானங்கள் உண்டென்றும், அதில் ஷெட்யூல் வகுப்பினருக்கு (Scheduled Castes எவ்வளவு ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன வென்றும், ஷெட்யூல் மலை ஜாதியினருக்கு (Schedule Tribes) எவ்வளவு ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன வென்றும் குறிப்பிட்டிருக்கிறது.

தொகுதியின் பெயர்	தொகுதியின் விஸ்தீரணம்	மொத்த ஸ்தானங்கள்	ஷெட்யூல் ஜாதியினருக்கு
சென்னை	சென்னை சிடி, சைதாபேட்டை தாலூகாவும் குன்னத்தூர் பிர்காவும் ...	2	1
செங்கல்பட்டு	செங்கல்பட்டு ஜில்லா (சைதாபேட்டை தாலூகா, குன்னத்தூர் பிர்கா, பெரந்தூர், காஞ்சீபுரம் பிர்காக்கள் நீங்கலாக. ஆனல், காஞ்சீபுரம் பிர்காவில் சில கிராமங்கள் உண்டு ...	2	1
காஞ்சீபுரம்	பெரந்தூர், காஞ்சீபுரம் பிர்காக்கள், அரக்கோணம், வாலாஜாப்பேட்டை, செய்யார் தாலூகாக்கள் (அனகாவூர் வக்கடை, ராணிப்பேட்டை, வாலாஜாபெட் பிர்க்காக்கள் நீங்கலாக) ...	1	...
வேலூர்	திருவண்ணமலை, செங்கம், திருப்பத்தூர் வேலூர், குடியாத்தம் தாலூகாக்களும், ராணிப்பேட்டை, வாலாஜாபேட்டை பிர்காக்களும் ..	2	1
வந்தவாசி	வந்தவாசி, போளூர் ஆரணி தாலூகாக்கள், அனகாவூர், வக்கடை பிர்காக்கள் ..	1	...
கிருஷ்ணகிரி	சேலம் ஜில்லாவில் கிருஷ்ணகிரி, ஹரூர், ஹோசூர் தாலூகாக்கள் ...	1	...
தர்மபுரி	சேலம் ஜில்லாவில் ஓமலூர், தர்மபுரி தாலூகாக்களும் இடப்பாடி பிர்காவும்...	1	...
சேலம்	சேலம், ராசீபுரம் தாலூகாக்கள், எற்காடு சப்தாலூகா, எதாப்பூர், ஆத்தூர் பிர்காக்கள். (ஆத்தூர் பிர்காவில் சில கிராமங்கள் இல்லை) ..	1	...
ஈரோடு	ஈரோடு, பவானி தாலூகாக்கள், குகலூர் பிர்கா, கோபிசெட்டிப் பாளயம் பிர்காவில் சில கிராமங்கள் ...	1	...
திருச்செங்கோடு	திருச்செங்கோடு, நாமக்கல் தாலூகாக்கள் (இடப்பாடி பிர்கா நீங்கலாக) ...	1	...

தொகுதியின் பெயர்	தொகுதியின் விஸ்தீர்ணம்	மொத்த ஸ்தானங்கள்	ஷெட்யூல்ட் ஜாதியினருக்கு
திருப்பூர்	கொள்ளேகாலம், கோபிசெட்டிப்பாளயம், திருப்பூர் தாலூகாக்கள், சேவூர், அவனுசி, வாரப்பட்டி பிர்காக்களும், கோபிசெட்டிப்பாளயம் பிர்க்காவில் சில கிராமங்களும் ...	1	...
பொள்ளாச்சி	பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை தாலூகாக்கள், வாரப்பட்டி பிர்கா, குண்டாடம் பிர்காவில் சில கிராமங்கள் ..	1	...
கோயமுத்தூர்	நீலகிரி ஜில்லா; அவனுசி தாலூகா (சேவூர் அவனுசி பிர்காக்கள் நீங்கலாக) கோயமுத்தூர் தாலூகா (கோயமுத்தூர் பிர்கா நீங்கலாக ஆனால், கோயமுத்தூர் முனிசிபாலிடி உண்டு) ...	1	...
கரூர்	கரூர் தாலூகா, கட்டளை, குளித்தலை, பஞ்சப்பட்டி பிர்க்காக்கள்; தர்மபுரம் தாலூகா. (வெள்ளக்கோயில், குண்டாடம் பிர்காக்களில் சில நீங்கலாக)	1	...
புதுக்கோட்டை	ஆலங்குடி, திருமயம், குளத்தூர் தாலூகாக்கள், இலுப்பூர் திருவரம்பூர், மணிகண்டம் பிர்காக்கள் குழித்தலை தாலூகா (கட்டளை, குழித்தலை, பஞ்சப்பட்டி பிர்காக்கள் நீங்கலாக) ..	1	...
பெரம்பலூர்	பெரம்பலூர், உடையார்பாளயம் தாலூகாக்கள், (அரியலூர், திருமழவாடி பிர்காக்கள் நீங்கலாக); உப்பிலியாபுரம் கண்ணனூர் பிர்காக்கள், தாத்தய்யங்கார் பேட்டை பிர்கா. (இதில் சில கிராமங்கள் நீங்கலாக) ...	1	...
திருச்சிராப்பள்ளி	லால்குடி தாலூகா (புள்ளம்பாடி பிர்கா நீங்கலாக) திருச்சி தாலுகா (இலுப்பூர், திருவரம்பூர் மணிகண்டம் பிர்காக்கள் நீங்கலாக) முசிரி தாலுகா (உப்புலியாபுரம், கண்ணனூர், தாத்தய்யங்கார் பேட்டை பிர்காக்கள் நீங்கலாக ஆனால் தாத்தய்யங்கார் பேட்டை பிர்காவில் சில கிராமங்கள் மட்டும் உண்டு) ..	1	...
தஞ்சாவூர்	அரந்தாங்கி, பட்டுக்கோட்டை தஞ்சாவூர் தாலூகாக்கள் (திருவையாறு, நடுக்காவேரி பிர்காக்கள் நீங்கலாக) ..	1	...
கும்பகோணம்	கும்பகோணம், பாபநாசம் தாலூகாக்கள் (நாச்சியார் கோயில் பிர்கா நீங்கலாக); திருவையாறு நடுக்காவேரி பிர்காக்கள்; புள்ளம்பாடி, அரியலூர் திருமலைவாடி பிர்காக்கள் ...	1	...
மாயூரம்	மாயூரம், சீர்காழி, நன்னிலம், மன்னார்குடி, திருத்துறைபூண்டி, நாகபட்டிணம் தாலூகாக்கள்; நாச்சியார் கோயில் பிர்கா ...	2	1
கூடலூர்	விருத்தாசலம், சிதம்பரம், கூடலூர் தாலூகாக்கள் (பண்ருட்டி சப்தாலூகா நீங்கலாக); கள்ளக்குறிச்சி தாலூகா (பாக்கம் பிர்காவில் சில கிராமங்கள் நீங்கலாக தலைவாசல், வீராங்கனூர், சங்கவல்லி பிர்காக்கள்; ஆத்தூர் பிர்காவில் சில கிராமங்கள் ...	2	1
திண்டிவனம்	திண்டிவனம், செஞ்சி, திருக்கோயிலூர், விழுப்புரம் தாலூகாக்கள்; பண்ருட்டி சப்தாலூக்கா; பாக்கம் பிர்காவில் சில கிராமங்கள் ...	2	1
திருநெல்வேலி	திருநெல்வேலி, நாங்குனேரி, அம்பாசமுத்திரம் தாலூகாக்கள் (அம்பாசமுத்திரம் கடயம் பிர்காக்கள் நீங்கலாக) ...	1	...

ஸ்ரீ வைகுண்டம்	ஸ்ரீ வைகுண்டம், திருச்செந்தூர் தாலூகாக்கள்; விளாத்தி குளம், ஒட்டப்பிடாரம் பிர்காக்கள் ...	1	...
சங்கரநயினர் கோயில்	தென் காசி தாலூகா; அம்பாசமுத்திரம், கடயம் பிர்காக்கள்; சங்கர நயினர் கோயில் தாலூகா (திருவேங்கடம் பிர்காவும் பழங்கோட்டை பிர்காவில் சில கிராமங்கள் நீங்கலாகவும்) ...	1	...
அருப்புக்கோட்டை	கோயில்பட்டி தாலூகா (விளாத்தி குளம், ஒட்டப்பிடாரம் பிர்காக்கள் நீங்கலாக) திருவேங்கடம் பிர்கா; பழங்கோட்டை பிர்காவில் சில கிராமங்கள்; முதுகளத்தூர், அருப்புக்கோட்டை தாலூகாக்கள்; பார்த்தபனூர் பிர்கா (அருப்புக்கோட்டை தாலூகாவில் காரியாப்பட்டி பிர்கா நீங்கலாக) ...	1	...
ராமநாதபுரம்	திருவதானி, ராமநாதபுரம், பரமக்குடி, திருப்பத்தூர் தாலூகாக்கள் (பார்த்தபர் இளயாங்குடி கன்னல் பிர்காக்கள் நீங்கலாக) ...	1	...
ஸ்ரீ வில்லிபுத்தூர்	ஸ்ரீ வில்லிபுத்தூர், சாத்தூர் தாலூகாக்கள், காரியாப்பட்டி பிர்கா ...	1	...
மதுரை	மதுரை, மேலூர், நிலக்கோட்டை தாலூகாக்கள், தேவதானப்பட்டி, திருமங்கலம், கள்ளிகுடி கல்லுப்பட்டி பிர்காக்கள்; சாணரப்பட்டி, வடமதுரை (இதில் சில கிராமங்கள் நீங்கலாக); சிவகங்கை தாலூகா; இளயான்குடி பிர்கா, கள்ளல் பிர்கா ...	2	1
பெரியகுளம்	கோடைக்கானல், பெரிய குளம் தாலூகாக்கள், உசிலம்பட்டி, சேதாப்பட்டி, பணிகுண்டு, வளந்தூர் பிர்காக்கள் (தேவதானப்பட்டி பிர்கா நீங்கலாக ...	1	...
திண்டுக்கல்	பழநி தாலூகா, ஆத்தூர், திண்டுக்கல், வேதசந்தூர், பாளம் எரியோடு பிர்காக்கள், வட மதுரை பிர்காவில் சில கிராமங்கள் ...	1	...

சென்னைச் சட்டசபை (Madras Legislative Assembly)

தொகுதிகள்

தொகுதியின் பெயர்	தொகுதியின் விஸ்தீர்ணம்	மொத்த ஸ்தானங்கள்	ஷெட்யூல் ஜாதியினருக்கு
	சென்னை		
வண்ணாரப் பேட்டை	புதுவண்ணாரப்பேட்டை, ராயபுரம், சிங்காரத் தோட்டம், சஞ்சீவிராயன் பேட்டை, கொருக்குப் பேட்டை வார்டுகள் ...	1	...
ஹார்பர்	பெத்துநாயக்கன் பேட்டை, எழுகிணறு, அம்மன்கோயில், முத்தியால்பெட், ஹார்பர், கச்சாலேச்வரர் கோயில், கொத்தவால்சாவடி, சௌகார் பேட்டை டிரிவல்யன்பேசின், கோட்டை வார்டுகள் ...	1	...
சூளை	பேசின்பிரிட்ஜ், சூளை, புளியாந்தோப்பு, கொசப்பெட், பெரம்பூர் பாரக்ஸ், செம்பியம், அயனாவரம், புரசவாக்கம், வியாசர்பாடி வார்டுகள் ...	2	1
ஆயிரம்விளக்கு	தேனாம்பேட்டை. ராயப்பேட்டை, ஆயிரம் விளக்கு, கோடம்பாக்கம், நுங்கம்பாக்கம், கீழ்ப்பாக்கம் வார்டுகள் ...	1	...
எழும்பூர்	இடப்பாளயம், பார்க்டவுன், பெரியமெட், வேப்பேரி, எழும்பூர், கோமளீஸ்வரன் பேட்டை, சிந்தாதிரிப்பேட்டை, புதுப்பாக்கம் வார்டுகள் ...	1	...
திருவல்லிக்கேணி	நேப்பியர் பார்க், திருவட்டீஸ்வரன்பேட்டை, சேப்பாக், திருவல்லிக்கேணி, ஜாம்பஜார், மீர்சாகிப்பேட்டை வார்டுகள் ...	1	...
மயிலாப்பூர்	மயிலாப்பூர், வடக்கு, தெற்கு, அடையாறு, கிண்டி, சைதாப்பேட்டை, தியாகராயநகர், வடக்கு, தெற்கு வார்டுகள் ...	1	...

செங்கல்பட்டு ஜில்லா

பொன்னேரி	பொன்னேரி தாலூகா, ...	2	1
திருவள்ளூர்	திருவள்ளூர் தாலூகா ...	2	1
சைதாப்பேட்டை	சைதாப்பேட்டை தாலூகாவும் குன்னத்தூர் பிர்காவும் ...	2	1
ஸ்ரீபெரும்பூதூர்	ஸ்ரீபெரும்பூதூர் தாலூகா (குன்னத்தூர், செரப்பாஞ்சேரி பிர்காக்கள் நீங்கலாக)	1	...
திருப்போரூர்	திருப்போரூர், கூடுவாஞ்சேரி பிர்காக்கள், செரப்பாஞ்சேரி பிர்கா, வாலாஜாபாத் பிர்கா ...	1	...
செங்கல்பட்டு	செங்கல்பட்டு தாலூகா (கூடுவாஞ்சேரி, திருப்போரூர் பிர்காக்கள் நீங்கலாக) ...	1	...
மதுராந்தகம்	மதுராந்தகம் தாலுகா ...	2	1
உத்தரமேரூர்	காஞ்சீபுரம் தாலுகா, (காஞ்சீபுரம், வாலாஜாபாத் பரந்தூர் பிர்காக்கள் நீங்கலாக ஆனல், காஞ்சீபுரம் பிர்காவில் சில கிராமங்கள் உண்டு)	1	...
காஞ்சீபுரம்	காஞ்சீபுரம் பிர்கா (சில கிராமங்கள் நீங்கலாக) பரந்தூர் பிர்கா ...	1	...

வடஆற்காடு ஜில்லா

குடியாத்தம்	குடியாத்தம் தாலுகா (காட்பாடி பிர்கா நீங்கலாக) ...	2	1
திருப்பத்தூர்	கண்டிலி, கொரட்டி, திருபத்தூர் பிர்காக்கள் ...	1	...
வாணியம்பாடி	நாட்டரம்பள்ளி, வாணியம்பாடி, அலங்கல்யம் பிர்காக்கள்; திருப்பத்தூர் தாலுகாவில் மலை கிராமங்கள் ...	1	...
வேலூர்	வேலூர் தாலுக்கா ...	2	1
அரக்கோணம்	அரக்கோணம், பொன்னப்பாக்கம், கீழ வீதி பிர்காக்கள் ...	1	...
ஷோலிங்கர்	பனஜி, காவேரிப்பாக்கம், ஷோலிங்கர் பிர்காக்கள் ...	1	...
ராணிப்பேட்டை	காட்பாடி, ராணிப்பேட்டை. வாலாஜாப்பேட்டை பிர்காக்கள் ...	1	...
ஆற்காடு	ஆற்காடு, திமிரி, கால்வாய் பிர்காக்கள்	1	...
வந்தவாசி	வந்தவாசி தாலுகா, அனக்காவூர், வக்கடை பிர்காக்கள் ...	2	1
செய்யாறு	கள்பர் செய்யாறு, பருங்கத்தூர், தேகுரை, தூசி, வேம்பாக்கம் பிர்காக்கள் ...	1	...
திருவண்ணமலை	திருவண்ணமலை தாலுக்காவும், தண்டாரம்பதி பிர்காவும் ...	2	1
செங்கம்	செங்கம், பாதியக்கிரஹாரம், தனிப்பாடி பிர்காக்கள் ...	1	...
கலசப்பாக்கம்	கடலுடி, கலப்பாக்கம், மண்டகளத்தூர், தச்சம்பூதி பிர்காக்கள் ...	1	...
போதூர்	போலூர், சந்தவாசல், கண்ணமங்கலம் பிர்காக்கள் ...	1	...
ஆரணி	ஆரணி தாலுகா (கண்ணமங்கலம் பிர்கா நீங்கலாக) ...	1	...

சேலம் ஜில்லா

நாமக்கல்	புதுச்சத்திரம், சேந்தமங்கலம், நாமக்கல், மோகனூர் பிர்காக்கள் ...	2	1
பரமத்தி	பரமத்தி, கபிலமலை பிர்காக்களும் திருச்செங்கோடு பிர்காவில் சில கிராமங்களும் ...	1	...
திருச்செங்கோடு	திருச்செங்கோடு தாலுகா (இடப்பாடி பிர்காவும், திருச்செங்கோடு பிர்காவில் சில கிராமங்களும் நீங்கலாக) ...	2	1
இடப்பாடி	இடப்பாடி, மேட்டூர், நங்கவல்லி பிர்காக்கள் ...	1	...
ராசிபுரம்	ராசீபுரம், வெண்ணந்தூர் பிர்காக்கள் ...	1	...
ஆத்தூர்	காமகிரிப்பேட்டை, எதப்பூர், ஆத்தூர் பிர்காக்கள் (ஆத்தூர் பிர்காவில் சில கிராமங்கள் நீங்கலாக) ...	1	...
தலைவாசல்	தலைவாசல், வீராங்கனூர், கங்கவல்லி பிர்காக்களும் ஆத்தூர் பிர்காவில் சில கிராமங்களும் ...	1	...
சேலம் டவுன்	சேலம் முனிசிபாலிடி ..	1	...
சேலம் ரூரல்	சேலம் பிர்கா (சேலம் முனிசிபாலிடி நீங்கலாக) வீரபாண்டி பிர்கா ...	1	...
வலப்பாடி	கரிப்பட்டி, வலப்பாடி, பனமரத்துப்பட்டி பிர்காக்களும் எற்காடு சப்தாலுகாவும்...	1	...
ஹஸூர்	ஹஸூர் தாலுகா, பர்கூர், சாத்தூர் மத்தூர் பிர்காக்கள் ..	2	1

ஓமலூர்	ஓமலூர், தாராமங்கலம் பிர்காக்கள் ...	1	...
மெச்சேரி	மெச்சேரி, கடயம்பட்டி நல்லம்பள்ளி பிர்காக்கள் ...	1	...
தர்மபுரி	தர்மபுரி பிர்கா (தர்மபுரி மிட்டா கிராமம் நீங்கலாக) கரிமங்கலம் பிர்கா, பாலக்கோடு பிர்காவில் சில கிராமங்கள் ...	1	...
பெண்ணகரம்	பெண்ணகரம், இர்தூர் பாலக்கோடு பிர்காக்கள் (பாலக்கோடு பிர்காவில் சில கிராமங்கள் நீங்கலாக) ..	1	...
கிருஷ்ணகிரி	காவேரிப்பட்டணம், கிருஷ்ணகிரி பர்கூர் பிர்காக்கள் ...	1	...
உத்தன் பள்ளி	வேப்பனப்பள்ளி, குண்டரப் பள்ளி உத்தனப்பள்ளி பிர்காக்கள் ...	1	...
ஹோசூர்	ஹோசூர்தாலுகா (உத்தனப்பள்ளி பிர்கா நீங்கலாக) ...	1	...
	கோயமுத்தூர் ஜில்லா		
கொள்ளே காலம்	கொள்ளே காலம் தாலுகா ...	1	...
பவானி	அம்மாப்பேட்டை, குச்சி பவானி பிர்காக்கள் ...	1	...
கோபி செட்டிப் பாளையம்	ஆண்டியூர் பிர்கா, கோபி செட்டிப் பாளயம் பிர்காவில் சில கிராமங்கள் நீங்கலாக பாக்கி, குகலூர் பிர்கா ...	1	...
நம்பியூர்	வாணிபுத்தூர், நம்பியூர், சாலிய மங்கலம், தலவாடை; புளியம்பட்டி பிர்காக்கள், கோபி செட்டிப் பாளயம் பிர்காவில் சில கிராமங்கள்; சேவூர் பிர்கா ...	2	1
மேட்டுப் பாளயம்	அன்னூர், சிறுமுகை மேட்டுப் பாளயம் பிர்காக்கள் ...	1	...
தொண்டா முத்தூர்	பெரிய நாயக்கன் பாளயம், சர்க்கார் சாமாக்குளம், தெண்டு முத்தூர் பிர்காக்கள் ...	1	...
கோயமுத்தூர்	கோயமுத்தூர் முனிசிபாலிடி ...	1	...
மதுக்கரை	கோயமுத்தூர் பிர்கா (கோயமுத்தூர் முனிசிபாலிடி நீங்கலாக); மதுக்கரை பிர்கா ...	1	...
பொள்ளாச்சி	பொள்ளாச்சி கோலாரப்பட்டி, ஆனைமலை பெரிய வலவாடி பிர்காக்கள் ...	2	1
கோவில் பாளயம்	கிணத்துக்கடவு, கோவில் பாளயம், வாரப்பட்டி பிர்காக்கள் ...	1	...
உடுமலைப் பேட்டை	உடுமலைப் பேட்டை, குடிமங்கலம், மடத்துக் குளம், பிர்காக்களும் குண்டாடம் பிர்காவில் சில கிராமங்களும் ...	1	...
தாராபுரம்	தாராபுரம், கொழுமங்குழி, குண்டாடம் பிர்காக்கள் (இதில் சில கிராமங்கள் நீங்கலாக) ...	1	...
காங்காயம்	காங்கயம், முளணூர் பிர்காக்களும் வெள்ளகோயில் பிர்காவில் சில கிராமங்களும்...	1	...
கொடுமுடி	வெள்ளக்கோயில் பிர்கா, (சில கிராமங்கள் நீங்கலாக) சிவகிரி கொடுமுடி பிர்காக்களும் ...	1	...
ஈரோடு	ஈரோடு, பெருந்துறை பிர்காக்கள். ...	1	...
ஊத்துக்குழி	மொட்டுக் குறிச்சி, சென்னிமலை, ஊத்துக்குழி பிர்காக்கள் ...	1	...
திருப்பூர்	திருப்பூர் தாலுகா (வாரப்பட்டி பிர்கா நீங்கலாக); அவனுசி பிர்கா ...	2	1
	தென் ஆற்காடு ஜில்லா		
மேல்மலயனூர்	மேல்மலயனூர், சர்த்தம்பாடி, மேலாலக்கூர் பிர்காக்கள் ...	1	...
செஞ்சி	சத்தியமங்கலம், செஞ்சி, வல்லம் பிர்காக்கள் ...	1	...
திண்டிவனம்	திண்டிவனம் தாலுகா ...	2	1
விக்கிரவாண்டி	விக்கிரவாண்டி, கிளை, கஞ்சனூர், பிர்காக்கள் ...	1	...
விழுப்புரம்	விழுப்புரம், வளவனூர், கண்டமங்கலம் பிர்காக்கள் ...	1	...
திருக்கோயிலூர்	திருக்கோயிலூர் தாலுக்கா, பாக்கம் பிர்காவில் சில கிராமங்கள் ...	2	1
உளுந்தூர்பேட்டை	உளுந்தூர்பேட்டை சப்தாலுகா ...	1	...
கள்ளக்குறிச்சி	கள்ளக்குறிச்சி தாலுகா (தியாகதுர்க்கம் பிர்காவும் பாக்கம் பிர்காவில் சில கிராமங்களும் நீங்கலாக) ...	2	1
விருத்தாசலம்	விருத்தாசலம் தாலுகா (கம்மாபுரம், ஊத்தங்கால்மங்கலம் நீங்கலாக); தியாகதுர்க்கம் பிர்காவும் ...	2	1
பண்ருட்டி	பண்ருட்டி சப் தாலுகா ...	1	...

கடலூர்	கடலூர் தாலுகா டிவிஷன், கம்மாபுரம், ஊத்தங்கல்மங்கலம் பிர்க்காக்கள் ...	2	1
புவனகிரி	புவனகிரி, சேத்தியாத்தோப்பு பிர்க்காக்கள்	1	...
சிதம்பரம்	சிதம்பரம் தாலுகா (புவனகிரி, சேத்தியாத்தோப்பு பிர்க்காக்கள் நீங்கலாக) ...	2	1
	தஞ்சாவூர் ஜில்லா		
அரந்தாங்கி	அரந்தாங்கி தாலுகா ...	1	...
அதிராம்பட்டணம்	பெருமகளூர், சேதுபாவா சத்திரம், திருச்சிற்றம்பலம், பேராவூருணி, அதிராம்பட்டணம் பிர்காக்கள் ...	1	...
பட்டுக்கோட்டை	பட்டுக்கோட்டை, மதுக்கூர், தொண்டராம்பட்டி, காவாலிப்பட்டி, சில்லத்தூர் பிர்காக்கள் ...	1	...
தஞ்சாவூர்	தஞ்சாவூர், மூர்த்தியம்பாள்புரம், ஒரத்தநாடு பிர்காக்கள் ...	1	...
வல்லம்	திருக்காட்டுப்பள்ளி, சிங்கிப்பட்டி, வல்லம், உழவூர், கந்தர்வக் கோட்டை ...	1	...
பாபநாசம்	பாபநாசம் தாலுக்காவும் திருவையாறு நடுக்காவேரி பிர்க்காக்களும் ...	2	1
கும்பகோணம்	கும்பகோணம், சோழபுரம் பிர்காக்கள் ...	1	...
ஆடுதுறை	திருப்பனந்தாள், ஆடுதுறை, பந்தநல்லூர் பிர்காக்கள் ...	1	...
மாயூரம்	மாயூரம் தாலுகா ...	2	1
சீர்காழி	சீர்காழி தாலுக்கா ...	1	...
நன்னிலம்	நன்னிலம் தாலுகாவும் நாச்சியார்கோவில் பிர்காவும். ...	2	1
மன்னார்குடி	மன்னார்குடி, வடுவூர், பாலையூர் நாச்சிகுளம், திருத்துறைப் பூண்டி, வேதாரண்யம் பிர்காக்கள் ...	2	1
நீடாமங்கலம்	நீடாமங்கலம், சாத்தனூர், கோட்டூர் ஆலத்தம்பாடி பிர்காக்கள் ...	1	...
நாகப்பட்டினம்	நாகப்பட்டினம் தாலுகாவும் தலைஞாயிறு பிர்காவும் ...	2	1
	திருச்சிராப்பள்ளி ஜில்லா		
புதுக்கோட்டை	ஆலங்குடி தாலுகா ...	1	...
திருமயம்	திருமயம், குளத்தூர் தாலுக்காக்கள், இலுப்பூர் பிர்கா ...	2	1
அரவக்குறிச்சி	பரமத்தி, சின்னதாராபுரம், அரவக்குறிச்சி பிர்காக்களும் புகலூர் பிர்காவில் சில கிராமங்களும் ...	1	...
கரூர்	கரூர், வெள்ளியானை, புகளூர் (சில கிராமங்கள் நீங்கலாக); கட்டளை குழித்தலை, பஞ்சப்பட்டி பிர்காக்கள் ...	2	1
மணப்பாறை	மணப்பாறை சப் தாலுகா (மணப்பாறை பிர்காவில் சில கிராமங்கள் நீங்கலாக)	1	—
திருச்சி (தெற்கு)	தேகமலை பிர்கா, மணப்பாறை பிர்காவில் சில கிராமங்கள்; திருவரம்பூர் மணிகண்டம் பிர்காக்கள் ...	1	—
திருச்சி (வடக்கு)	பொன்மலை கலானி, புத்தூர் சேங்குளம், வரகனேரி, அபிஷேகபுரம், கோட்டப்பட்டு கிராமங்கள் திருச்சி முனிசிபாலிடிக்குள் கண்டோன்மெண்ட், பீமநகர், புத்தூர், தென்னூர், கோட்டை, தாராநல்லூர், வரகனேரி, பாலக்கரை, மேலப்புதூர், கள்ளக்குழி ...	1	—
ஸ்ரீரங்கம்	பாண்டமங்கலம் கிராமம், உறையூர், சிந்தாமணி, தேவதானம், ராக்போட் ஸ்ரீரங்கம் பிர்கா (ஸ்ரீ ரங்கம் முனிசிபாலிடி உள்பட); ஆண்டா நல்லூர் பிர்கா ...	1	—
முசிரி	முசிரி, தொட்டியம் பிர்காக்களும், தாத்தய்யங்கார்பேட்டை பிர்காவில் சில கிராமங்களும் ...	1	—
துறையூர்	உப்புலியாபுரம், கண்ணனூர் பிர்காக்கள்; சில கிராமங்கள் தவிர பாக்கி தாத்தய்யங்கார் பேட்டை பிர்கா ...	1	...
மணச்சநல்லூர்	புலிவலம் பிர்கா; மணச்சநல்லூர் கரியமாணிக்கம் பிர்காக்கள் ...	1	...
லால்குடி	லால்குடி தாலுகா (மணச்சநல்லூர், கரியமாணிக்கம் புள்ளம்பாடி பிர்காக்கள்) ...	1	...
பெரம்பலூர்	பெரம்பலூர் தாலுகா ...	2	1
அரியலூர்	புள்ளம்பாடி பிர்கா; அரியலூர், திருமலவாடி பிர்காக்கள் ...	1	...
ஜெயங்கொண்டம்	ஜெயங்கொண்டம் (உடையார் பாளயம்) தாலுகா (அரியலூர் திருமலவாடி பிர்காக்கள் நீங்கலாக) ...	2	1
	மதுரை ஜில்லா		
பழநி	கரிக்கடவு, பழநி பிர்காக்கள் ...	1	...
ஒட்டன்சத்திரம்	தோப்பம்பட்டி, கள்ளிமண்டபம், ஒட்டன் சத்திரம் பிர்காக்கள் ...	1	...
ஆத்தூர்	ஆத்தூர் பிர்கா ...	1	...

திண்டுக்கல்	திண்டுக்கல் பிர்காவும் வட மதுரை பிர்காவில் சில கிராமங்களும் ...	1	—
வேடசந்தூர்	வேடசந்தூர், பலகம், எரியோடு பிர்காக்கள் ...	1	—
வடமதுரை	சாணாரப்பள்ளி, வடக்கு நத்தம், தெற்கு நத்தம்; வட மதுரை பிர்கா (சில கிராமங்கள் தவிர) ...	1	...
மேலூர்	மதுரை தாலுகா (வடக்கு நத்தம், தெற்கு நத்தம் நீங்கலாக) ...	2	1
மதுரை (வடக்கு)	மதுரை முனிசிபாலிடியின் ஒரு பாகம்		
மதுரை (தெற்கு)	மதுரை முனிசிபாலிடியின் மற்றொரு பாகம் ...	1	...
நிலக்கோட்டை	நிலக்கோட்டை தாலுகா, தேவதானப்பட்டி பிர்கா ...	2	1
பெரியகுளம்	கோடைக்கானல் தாலுகா, தென்கரை, தேனி, ஆண்டிப்பட்டி பிர்காக்கள்; உசிலம்பட்டி பிர்கா ...	2	1
உத்தமபாளயம்	போடிநாயக்கனூர், உத்தமபாளயம் பிர்காக்கள் (சில கிராமங்கள் நீங்கலாக) ...	1	...
கம்பம்	கம்பம் பிர்காவும் உத்தம பாளயம் பிர்காவில் சில கிராமங்களும் ...	1	...
சேடப்பட்டி	சேடப்பட்டி, பன்னிகுண்டு, வளந்தூர் பிர்காக்கள் ..	1	...
திருமங்கலம்	திருமங்கலம், கள்ளிகுடி, கல்லுப்பட்டி பிர்காக்கள் ...	1	...
	ராமநாதபுரம் ஜில்லா		
ஸ்ரீவில்லிபுத்தூர்	ஸ்ரீ வில்லி புத்தூர் தாலுகா; (மல்லிபிர்கா நீங்கலாக) ...	2	1
எதிர்க்கோட்டை	மல்லி, சால்வார்பட்டி, எதிர்க் கோட்டை பிர்காக்கள் ...	1	...
சாத்தூர்	சாத்தூர், சிவகாசி பிர்காக்கள் ...	1	...
விருதுநகர்	விருது நகர், கரைப்பட்டி பிர்காக்கள் ...	1	...
அருப்புக்கோட்டை	அறுப்புக் கோட்டை மண்டபசலி பிர்காக்கள் ...	1	...
முதுகுளத்தூர்	முது குளத்தூர் தாலுகா திருச்சுழி, நரிக்குடி, புல் வாய்க்கரை, பார்த்திபனூர் பிர்காக்கள் ...	1	...
பரமக்குடி	பரமக்குடி தாலுகா (இளயான்குடி, பார்த்திபனூர் பிர்காக்கள் நீங்கலாக) ...	3	1

மானமதுரை	இளயான்குடி பிர்கா, திருபுவனம், திருப்பச்சட்டி, மானமதுரை பிர்காக்கள் ...	1	...
சிவகெங்கை	சிவகெங்கை, மடகுப்பட்டி, காளையார் கோயில், கல்லல் பிர்காக்கள் ...	1	...
திருப்பத்தூர்	திருப்பத்தூர் தாலுகா (காரைக்குடி, கல்லல் பிர்காக்கள் நீங்கலாக) ...	1	...
காரைக்குடி	காரைக்குடி பிர்கா; தேவகோட்டை பிர்கா ...	1	...
திருவாடானை	திருவாடானை தாலுகா (தேவகோட்டை பிர்கா நீங்கலாக) ...	1	...
ராமநாதபுரம்	ராமநாதபுரம் தாலுகா ...	1	...
	திருநெல்வேலி ஜில்லா		
பலாவூர் நாங்கனேரி	பலாவூர், ராதாபுரம், திசயன் விளை பிர்காக்கள் ...	1	...
சேர்மாதேவி	பலியூர், நாங்கனேரி, விஜய நாராயணம், மூலைக் கரைப்பட்டி, சிங்கிகுளம் பிர்காக்கள் ...	1	...
அம்பாசமுத்திரம்	கலக்காடு பிர்கா, மெலசேவல், சேர்மாதேவி, பாப்பாக்குடி பிர்காக்கள் ...	1	...
ஆலங்குளம்	அம்பாசமுத்திரம், கடயம் பிர்காக்கள் ...	1	...
தென்காசி	ஆலங்குளம், கீழ்பாவூர் பிர்காக்கள், தென்காசி, கடயநல்லூர், பாம்புலி பிர்காக்கள்	2	...
சங்கரநயினார் கோவில்	சங்கரநயினார் கோவில் தாலுகா (திருவேங்கடம் பிர்காவும் பழய கோட்டை பிர்காவில் சில கிராமங்களும் நீங்கலாக) ..	2	1
திருநெல்வேலி	திருநெல்வேலி தாலுகா ...	2	1
தூத்துக்குடி	தூத்துக்குடி பிர்கா ...	1	...
திருச்செந்தூர்	ஆழ்வார் திருநகரி, ஆத்தூர், திருச்செந்தூர், ஸ்ரீ வைகுண்டம், வளநாடு, ஆறுமுகமங்கலம், கருங்குளம் பிர்காக்கள் ..	2	1
சாத்தகுளம்	உதங்குடி, சாத்தங்குளம் பிர்காக்கள் ...	1	...
விளாத்திகுளம்	விளாத்திகுளம், ஒட்டப்பிடாரம் பிர்காக்கள் ...	1	...
கோயில்பட்டி	கோயில்பட்டி, மாசாப்பட்டி பிர்காக்சன் ..	1	...
கடம்பூர்	கயத்தூர், கடம்பூர் பிர்காக்கள், திருவேங்கடம் பிர்கா; பழக்கோட்டை பிர்காவில் சில கிராமங்கள் ...	1	...
	நீலகிரி ஜில்லா		
நீலகிரி	நீலகிரி ஜில்லா ...	2	2

224714

வாக்காளர்கள் தேர்தலில் நடந்துகொள்வது எப்படி?

‘வோட்’ செய்வது

அந்தந்தத் தொகுதியின் வாக்காளர் ஜாப்தாவில் பெயர் உள்ளவர்கள்தான் அந்தந்தத் தொகுதியில் நடக்கும் தேர்தலில் ‘வோட்’ செய்யலாம். இந்தியப் பிரஜை அல்லாதவரும், புத்தி சுவாதீனமற்றவரென்று கோர்ட்டால் நிர்ணயிக்கப்பட்டவரும், தேர்தல் குற்றம் செய்ததால் யோக்கியதை இழந்தவரும் எந்தத் தேர்தலிலும் ‘வோட்’ கொடுக்க முடியாது. ஒரே வகைத் தொகுதியில் ஒரு முறைதான் ‘வோட்’ கொடுக்கலாம். பல தொகுதிகளில் ‘வோட்’ பதிவு செய்தவருடைய எல்லா ‘வோட்’களும் செல்லாது. ஒரே தொகுதியில் ஒருவருடைய பெயர் வாக்காளர் ஜாப்தாவில் பல இடங்களில் இருந்தாலும், அவர் ஒரே ஒரு தரம்தான் ‘வோட்’ கொடுக்கலாம். தண்டனை அடைந்து ஜெயிலில் இருப்பவர்களும் போலீஸ் காவலில் இருப்பவர்களும் ‘வோட்’ செய்யக் கூடாது. தடுப்புக் காவலில் இருப்பவர்கள் மட்டிலும் ‘வோட்’ செய்யலாம்.

தேர்தல் தகராறுகள்

தேர்தல் சம்பந்தமான முடிவுகளை எவரும் சிவில் கோர்ட்டுகளில் ஆட்சேபிக்க முடியாது. தேர்தல் முடிவை ஆட்சேபணை செய்பவர்கள் ‘எலெக்‌ஷன் கமிஷனு’க்கு மனுப்போடவேண்டும். மனுவுடன் ரூபாய் 1000 டிபாசிட் கட்டவேண்டும். மனுவை விசாரிக்க ஒரு ‘டிரிபுனல்’ நியமிக்கப்படும். அதன் தலைவர் ஒரு ஹைகோர்ட் ஜட்ஜ் அல்லது ஜில்லா ஜட்ஜ் அந்தஸ்துள்ளவராக இருப்பார். வேறு இரண்டு அங்கத்தினர்களும் இருப்பார்கள் இந்த டிரிபுனல் செய்யும் தீர்ப்பே முடிவானதாகும்.

தேர்தல் ரத்து செய்யப்படலாம்

ஒரு தேர்தலில், தாராளமாக லஞ்சம் வழங்கப்பட்டிருந்தாலும் சரி, நியாய மற்ற செல்வாக்கு உபயோகபட்டிருந்தாலும் சரி, ஒரு குறிப்பிட்ட ஜாதி அல்லது வகுப்பினரால் வாக்காளர்கள் கட்டாயப்படுத்தப்பட்டோ பயமுறுத்தப்பட்டோ ‘வோட்’ கொடுத்திருந்தாலும் சரி, அததேர்தலே செல்லாதென ‘டிரிபுனல்’ சொல்லலாம். அபேட்சகர்கள் நியமனம் தாக்கல் செய்யப்படும்போது ஒரு அபேட்சகர் சட்ட விரோதமாய் ஏற்றுக்கொள்ளப்பட்ட காரணத்தினாலோ, ஏற்றுக்கொள்ளப்படாத காரணத்தினாலோ, அத்தேர்தலின் போக்கே மாறிவிட்டதென்று ஏற்பட்டாலும் அத்தேர்தல் செல்லாதென ‘டிரிபுனல்’ தீர்ப்பளிக்கலாம். தேர்தல் நடந்தால் கீழே விஸ்தரிக்கப்பட்டிருக்கும் “பெரிய தேர்தல் ஊழல்கள்” “சிறிய தேர்தல் ஊழல்கள்” “சட்ட விரோதமான நடத்தைகள்” இவைகளால் தான் ஒரு அபேட்சகர் ஜயித்தார் என்று ஏற்பட்டாலும் தேர்தல் ரத்தாகிவிடும். தேர்தலில் ஜயித்த அபேட்சகரோ, அவருடைய ஏஜண்டோ, அல்லது அவருடன் ஒற்றுமையாக இருந்த ஒருவரோ கீழே “பெரிய தேர்தல் ஊழல்கள்” என்று குறிப்பிடப்பட்டிருக்கும் ஊழல் எதைச் செய்திருந்தாலும் அவருடைய தேர்தல் ரத்தாகும். மேலும் சட்டவிரோதமாக வோட்’களைப் பதிவு கொண்டதாலோ, மறுத்ததாலோ தேர்தல் சம்பந்தமான சட்டங்களையும் விதிகளையும் பின்பற்றாத காரணத்தினாலோ, தவறாலோ, தேர்தலின் முடிவு பாதிக்கப்பட்டதென்று ஏற்பட்டாலும், அத்தேர்தல் ரத்துச் செய்யப்படும். தேர்தல் மனுப்போட்டவரையே ‘ஜயித்த’ வராகவும் தீர்மானிக்கவும் டிரிபுனலுக்கு அதிகாரம் உண்டு.

தேர்தல் ஊழல்களும் குற்றங்களும்

பெரிய ஊழல்கள் (Major Corrupt Practices) (1) லஞ்சம் கொடுப்பது (Bribery)—அதாவது ஒரு அபேட்சகரோ அவர் ஏஜண்டோ வேறு ஒரு அபேட்சகர் போட்டியிடுவதற்கோ, போட்டியிடாமலிருக்கவோ பணம் முதலிய வெகுமானம் கொடுப்பது; அல்லது வாக்காளருக்கு வோட் போடவோ, வோட் போடாமலிருக்கவோ வெகுமானம் கொடுப்பது. உண்மையாகச் சட்டப்படிக்கான செலவு செய்யப்பட்டு அதற்காகக் கணக்கில் எழுதப்பட்டுக் கொடுக்கப்படும் தொகைகள் இதில் சேராது. (2) மிதமிஞ்சிய நிர்ப்பந்தம் (undue Influence)—அதாவது ஒரு அபேட்சகரையோ, வாக்காளரையோ ஜாதிக்கட்டுப்பாடு செய்துவிடுவதாகவோ வேறுவிதமாக துன்புறுத்துவதாகவோ பயமுறுத்துவது; தெய்வ சாபம் ஏற்படுமென்று அவர் மனதில் பயத்தை உண்டாக்குவது முதலியவை, (3) ஒரு அபேட்சகரோ அவருடைய ஏஜண்டோ ஒரு வாக்காளருடைய வாக்குச் சீட்டை ஆள் மாறாட்டம் செய்து வாங்கும்படி வேறு ஒருவரைத் தூண்டுவது. (4) ‘போலிங்’ ஸ்டேஷனில் வோட்டிங் நடக்கும்போது, அபேட்சகரோ, அவர் ஏஜண்டோ வாக்குச் சீட்டுகளை அப்புறப்படுத்துவது (5) ஒரு அபேட்சகரின் நடத்தையைப்பற்றியோ, சொந்த யோக்கியதாம்சங்களைப் பற்றியோ அவர் தேர்ந்தெடுக்கப் படுவதைக் கெடுக்கும் பொருட்டும் பொய்யான விஷயங்களை வேறு ஒரு அபேட்சகரோ அவருடைய ஏஜண்டோ பிரசுரம் செய்வது. (6) வாக்காளர்களைப் போலிங் ஸ்டேஷனுக்கு ஏற்றிச் செல்லவும் திரும்பக் கொண்டு வரவும் ஒரு அபேட்சகரோ அவர் ஏஜண்டோ வாகனங்கள் அல்லது வண்டிகள் ஏற்பாடு செய்வது. (7) இச் சட்டத்திற்கும் விதிகளுக்கும் மாறாக ஒரு அபேட்சகர் அல்லது அவர் ஏஜண்டு செலவு

செய்வது. (8) ஒரு அபேட்சகர் தாம் ஜெயிப்பதற்காக, சர்க்கார் உத்தியோகஸ்தருடைய உதவியை நாடுவது இவைகள் பெரிய ஊழல்களாகும்.

சிறிய ஊழல்கள் (Minor Corrupt Practices.) (1) அபேட்சகர், அவர் ஏஜண்டு அல்லது அவர்கள் உதவியில்லாத ஒருவர் மேற்கண்ட எட்டு வகை ஊழல்களில் ஏதாவது செய்வது. (2) ஒரு வாக்காளர் ஆள்மாருட்டம் செய்து வோட்செய்வது அல்லது ஒரு இடத்தில் வோட்செய்துவிட்டு மறுபடி வோட்பதிவு செய்ய வருவது. (3) அபேட்சகராக இருப்பவர் போட்டி இடவோ வாபஸ் வாங்கவோ லஞ்சம் வாங்கிக் கொள்வது (4) தேர்தல் கணக்குப் பொய்யாகக் கொடுப்பது. (5) ஒரு அபேட்சகர் தாம் ஜயிப்பதற்காக ஜாதி, இனம், பிரிவு, மதம் இவை பேரால் வாக்களர்களை உத்சாகப் படுத்துவது; அல்லது மதச் சின்னங்களையோ, தேசியக் கொடி, தேசியச்சின்னம் போன்றவைகளை உபயோக படுத்துவது.

சட்ட விரோதமான நடத்தைகள்

(1) ஒரு அபேட்சகரைத் தவிர எவரும் அபேட்சகருடைய எழுத்து மூலமான அனுமதியின்றி ஒரு பொதுக் கூட்டத்திற்காகவோ, விளம்பரம் செய்யவோ, அறிக்கைகள் விடவோ செலவு செய்யச் செய்வது. (ஒரு ஸ்தாபனத்தால் செலவு செய்யப்படுவது இதில் சேராது.) (2) பொதுமக்களுக்கு மதுபானம் விற்பனை செய்யும் இடங்களை வாக்காளார்கள் கூடுவதற்காக ஏற்பாடு செய்வது (3) அச்சகம், பிரசுரிப்பவர் இவர்களின் பெயர் போடாத பிரசுரங்களையோ சுவரொட்டிகளையோ பிரசுரம் செய்வது.

குற்றங்கள் :—ஒரு தொகுதியில் வாக்குப்பதிவு (வோட்) எடுக்கப்படும் தினத்தில் (Election Day) பொதுக்கூட்டத்தைக் கூட்டுவதும், அதற்குப் போவதும் குற்றமாகும். இதற்கு ரூபாய் 250 வன்ர அபராதம் விதிக்கப்படலாம். (2) ஒரு தொகுதியில் தேர்தல் நடைபெறும் என்ற அறிக்கை வெளியான பின்பும், தேர்தல் தினத்திற்கு முன்பும் நடக்கும் ராஜீய சம்பந்தமான கூட்டங்களை நடக்க வொட்டாமல் செய்ய எவரும் ஒழுங்கீனமாக நடப்பது குற்றமாகும். இதற்கும் ரூ. 250 வரை அபராதம் விதிக்கப்படலம். ஒரு 'கூட்டம்' நடக்கும் போது அதன் தலைவரின் வேண்டுகோளின்பேரில் அவ்விதம ஒழுங்கீனமாக நடப்பவரின் விலாசத்தை எந்தப் போலீஸ்காரரும் குறித்துக் கொள்ளலாம். விலாசம் கொடுக்க மறுப்பவரையும் பொய் விலாசம் கொடுப்பதாகச் சந்தேகப்படப் படுபவரையும் போலீசார் அரெஸ்டும் செய்யலாம். (3) தேர்தல் நடத்தும் உத்தியோகஸ்தர்கள் ஒரு வாக்காளர் 'வோட் கொடுத்ததைப் பற்றியோ அதை எண்ணுவது பற்றியோ ரகசியமாக வைத்துக்கொள்ளாமலிருப்பது குற்றமாகும். இதற்கு மூன்று மாதம் வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். (4) ரிடர்னிங் ஆபீசர் முதலிய எந்தத் தேர்தல் அதிகாரியும் ஒரு அபேட்சகர் ஜயிக்க வேண்டுமென்று அவருக்குச் சாதகமாக நடந்து கொள்வது குற்றமாகும். எந்தத் தேர்தல் அதிகாரியாவது போலீஸ் உத்தியோகஸ்தராவது ஒரு வாக்காளரை, 'வோட்' கொடுக்கும்படியோ, கொடுக்க வேண்டாமென்றோ வேறு ஒரு ஒருவருக்கு வோட் சம்மந்தமாய்ச் சிபார்சு செய்யும்படியோ கேட்பதும் குற்றமாகும். இக்குற்றங்களுக்கு 6 மாத வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம் (5) தேர்தல் தினத்தன்று தேர்தல் நடக்கும் 'போலிங் ஸ்டேஷனில்' அல்லது அதற்கு 100 கஜத்திற்குள் எவரும் வாக்காளர்களை ஒரு அபேட்சகருக்கு வோட் போடும்படி கேட்பதோ 'வோட்' போடாமலிருக்கும்படிக் கேட்பதோ தேர்தல் சம்பந்தமாய் விளம்பரம் செய்வதோ குற்றமாகும். இதற்கு ரூபாய் 250 வரை அபராதம் விதிக்கப்படலாம். (6) தேர்தல் தினத்தன்று தேர்தல் நடக்கும் இடத்திலோ சமீபத்திலோ எந்த ஒலி பெருக்கியையும் உபயோகிப்பது குற்றமாகும்; கூச்சலிடுவதும் குற்றமாகும்; இதற்கு 3 மாதம் வரை சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். (7) தேர்தல் அதிகாரியின் சட்டப்படிக்கான உத்தரவுப்படி நடக்காமலிருப்பதும் குற்றமாகும். இதற்கும் அதே தண்டனை உண்டு. (8) போலிங் ஸ்டேஷனுக்கு வாக்காளர்களை அழைத்துச் செல்ல ஒரு அபேட்சகர் வண்டி வைப்பதும் குற்றமாகும். ரூ. 250 வரை அபராதம் விதிக்கப்படலாம். (9) தேர்தல் அதிகாரிகள் இச்சட்டப்படி நடக்காமலிருப்பதும் குற்றம்தான் ரூ. 500 வரை அபராதம் விதிக்கப்படலாம். (10), தேர்தலில் நடக்கும் இடத்தை விட்டு வாக்குச் சீட்டை வெளியே மோசடியாகக் கொண்டுபோவது குற்றமாகும். இதற்கு ஒரு வருடம் வரை சிறை தண்டனை அல்லது ரூ. 500 வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். (11) மோசடியாக நியமனச் சீட்டை அழிப்பது; நோட்டீசுகளை அழிப்பது; வாக்குச் சீட்டுகளை அழிப்பது; அதிகாரமற்ற 'பாலட் பேபர்களைக்' கொடுப்பது; பாலட் பெட்டியில் வேறு சாமான்களைப் போடுவது; பாலட் பெட்டியை உடைப்பது; இவை குற்றமாகும். இதைச் செய்பவர் தேர்தல் அதிகாரியாக இருந்தால் இரண்டு வருடம் வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். மற்றவர்களுக்கு 6 மாதம் வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

(ஆதாரக் கல்வி)

செய்தி சுருள்

சேவையும்—செய்தியும்

(ஜயன்)

தேசாபிமானம்

தேசாபிமானம் என்பதைப் பற்றி நாம் எல்லோரும் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொருவருக்கும் தன் பிறந்த நாடான தாய் நாட்டின் மீது வைக்கும் பற்றுதல் அல்லது அன்பு என்பதற்குதான் தேசாபிமானம் என்று பெயர்.

நாம் பிறந்த நாடான இந்திய நாட்டின் மீது நாம் ஒவ்வொருவரும் அபிமானம் வைத்து நம்முடைய தாய் நாடாக கருத வேண்டும்.

சுமார் 150 வருஷங்களுக்குமேல் நம் இந்திய நாட்டை ஏழாயிரம் மைலுக்கப்பாலுள்ள ஆங்கிலேயர்கள் அவர்களுடைய சொத்தாகக் கருதி; எல்லாவிதமான பாத்தியங்களையும் அனுபவித்து வந்தார்கள், அக்காலத்தில் நம் இந்திய நாட்டு மக்களுக்கு உயர்ந்த பதவிகளை கொடுக்காமல், எல்லாவற்றையும் ஆங்கிலேயர் என்றழைக்கப்படும் பிரிட்டிஷ் காரர்களுக்கு வழங்கினர். சிலர் இதை எதிர்த்தனர்; அவர்களை சிறையிலடைத்தும், துப்பாக்கியால் சுட்டுக், கொன்றார்கள்.

அச்சமயத்தில் இந்திய ராஜபுத்திர வம்சத்தினர்கள் ஆண்டு வந்த ராஜ்யங்கள் ஒற்றுமை இல்லாததால், அடிக்கடி அவர்களுக்குள் சண்டை பூசல்கள் முதலியவைகள் ஏற்பட்டு நம் நாடு சிதறுண்டு கிடந்தன.

இவ்வாறு இருப்பினும், நம் நாட்டிலிருந்து ஏராளமான பொருள்களும், செல்வங்களும், அன்னிய நாட்டிற்கு செல்வதைப் பார்த்த சில தேசாபிமானிகள், தன் சொந்த நாட்டின் பற்றுதல் அதிகமாகி, உச்ச நிலையடைந்து 1857-ல் சிப்பாய் கலகம், என்று ஒரு மாபெரும் சுதந்திர இயக்கத்தை நடத்தினர். அவ்வியக்கத்தில் ஜான்ஸி ராணியான லக்ஷ்மி பாய் மிகவும் கடுமையாக ஆங்கிலேயரை எதிர்த்தாள். ஆனால் அச்சமயத்தில் இந்தியர்களுக்குள் ஒற்றுமையின்மையாலும், ஆங்கிலேயர்கள் மும்முரமாக பாதுகாப்பு நடவடிக்கை எடுத்ததாலும் கலகத்தை அடக்கி, இந்தியர்களை பல சட்ட இலாக்காக்களில் சேர்த்துக்கொண்டு தங்களுடைய ஆட்சி முறையை மேன்மேலும் ஸ்திரபடுத்தினார்கள். இம்மாதிரியாக தேசாபிமானம் மேலிட்டு பாஞ்சாலகுறிச்சியை ஆண்டு வந்த வீர தமிழரான கட்டபொம்மன் என்பவர் பல முறை ஆங்கிலேயரை தோற்கடித்து, தன் தாய் நாட்டை காப்பாற்ற தொண்டு செய்து, கடைசியில் ஆங்கிலேயரால் அவர் தூக்கிலிடப்பட்டார்.

ஆங்கிலேயர்கள் ஆட்சி முறையிலே நம் நாட்டின் மொழிகள் எல்லாம் அழிக்கப்பட்டு, ஆங்கிலேய மொழியை கொண்டுவந்து புகுத்தினார்கள். இந்திய கைத்தொழில்களுக்கு இடையூறாக சட்டம் வகுத்தனர்.

நாளா வட்டத்தில் நம் நாட்டில் சில அறிவாளிகள் தோன்றினார்கள். அவர்கள் நம் மக்கள் வஞ்சிக்கப்படுவதையும் அறியாமை மூழ்கி கிடப்பதையும், இந்திய மக்கள் நடத்தப்படும் விதங்களையும் பார்த்து ஆங்கிலேயரது ஆட்சிமுறையை எதிர்த்து போராடினார்கள். தேச சேவை, பற்றுதல் அதிகமாகி எங்கள் தேசத்தை நாங்கள்தான் ஆளவேண்டுமென்று ஓர் இயக்கம் ஆரம்பித்தார்கள்.

அவர்களுள் முக்கியமானவர்களான, காந்திஜி, பாரதியார், திலக், அரவிந்கோஷ், கோகலே போன்றவர்கள்.

காந்திஜி அவர்கள் இந்திய மக்கள் அனைவரும் ஒருதாயின் மக்கள்—நாம் எல்லோரும் சகோதரர்கள் என்ற உணர்ச்சியோடு சண்டை பூசல் இல்லாமல் ஒற்றுமையாக நாம் ஆங்கில ஆட்சியை ஒழிக்க பாடு பட வேண்டும், நமக்கு சொந்தமான நம் நாட்டை நாமே ஆள வேண்டும், இதுதான் நாம் நம் தாய்சகு செய்யும் பணி, கடமை, என்று பிரசாரம் செய்து மக்களை அறியாமையிலிருந்து நீக்கி தேசாபிமானத்தை வளர்த்தார். மகாத்மா காந்தி பலமுறை சிறை சென்றும் விடா முயற்சியுடனும் தாய் நாட்டில் உள்ள அபிமானத்தாலும் அன்னிய ஆட்சியை எதிர்த்து கடைசியில் நமக்குச் சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்தார்.

இன்று நாம் சுதந்திர மக்களாக வாழ்ந்து வருகிறோம். ஆனால் சுதந்திரத்தின் அடிப்

படை நோக்கம் எல்லோரும் கல்வி கற்க வேண்டும். அதனல் நாம் ஒவ்வொருவரும் கல்வி கற்று நம் நாட்டை உலக நாடுகளில் முதலாவதாக செழிக்க ஊக்கத்துடன் உழைக்கவேண்டும். அவ்வப்பொழுது சமூகத் தொண்டுகள் செய்யவேண்டும். இதுதான் ஒவ்வொரு வரும் தன் தாய் நாட்டின் மீது வைத்திருக்கும் தேசாபிமானத்தை எடுத்துக் காட்டும்.

தொண்டு

நம் ஒவ்வொருவரும் வசிக்கும் காலத்திற்குள் அநேகவிதமான கடமைகளையும், தொண்டுகளையும், நம் தாய் நாட்டிற்காகச் செய்யவேணடும். அவற்றில் சமூகத்தொண்டு என்பதும், நாம் செய்யவேண்டிய கடமைகளில் முக்கியமானது.

முக்கியமாக, நம் நாட்டினுள்ள, கல்வியறிவு இல்லாதவர்களை, அறிவாளிகளாக மாற்றுவது, நாம் நம்முடைய நாட்டிற்காகச் செய்யும் சமூகத்தொண்டு என கருதலாம்.

கல்வி கற்றவர்கள், அறிவில்லாமல், கஷ்டப்படும் நம் சகோதரர்களுக்கு போதித்து அவர்களது அறியாமையை அகற்ற வேண்டும்.

இவ்வாறு செய்வது ஒரு தேசாபிமானத் தொண்டு எனலாம்.

செய்திகள்

நம் நாட்டில் அநேக பத்திரிகைகள், பல மொழிகளில் வெளிவருகின்றன. இவற்றில் பல, தினசரியாகவும், வாரப்பத்திரிகையாகவும், மாதப்பத்திரிகையாகவும் வெளிவருகின்றது.

இவைகளின் உதவியால், நம் நாட்டிலும், அயல் நாட்டிலும் தினந்தோறும் நடக்கும் வியாபார ஒப்பந்தங்கள், பொருள்களின், ஏற்றுமதி, இறக்குமதி, முதலிய செய்திகள், வியாபாரச் சரக்குகளின் விலைகள், அன்றாடம் இயற்றப்படும் சட்டதிட்டங்கள், விஞ்ஞான ஆராய்ச்சியைப் பற்றிய அரிய சங்கதிகள் முதலியவைகளை நாம் அறியலாம். இதன் பயன் நமது அறிவு பெருகி, புத்திவிசாலமடைகின்றது. அதனல் நாம் எல்லோரும் அவசியம் பத்திரிகை படிக்கவேண்டும். ஆனல் இன்று ஏழைகளாக இருக்கும் மக்கள், பத்திரிகை படிக்கும் நிலையில் இல்லை. அதனல் அவர்கள் கவலைப்பட வேண்டியதில்லை. ஏன்? கூட்டுச் சங்கத்தின் மூலமாக அவரவர்கள் தங்கள் குறையை நிவர்வத்தி செய்யலாம்.

சுமார் பத்து அல்லது பதினைந்து பேர்கள் சேர்ந்து, பத்திரிகையின் மொத்த விலையை பங்கு போட்டு, ஒவ்வொருவரும் அவர்கள் பங்கை போட்டு பத்திரிகை வாங்கி படிக்கலாம்.

இதனல் பணச்செலவு அதிகமாகாமல் இருப்பதுடன், நாம் உலக விஷயங்களை அறிய ஏதுவாகும். இதற்குத்தான் கூட்டு சங்கம் எனபெயர்.

ஆகையால் நீங்கள் அவசியம் பத்திரிகை படித்து உங்கள் அறிவை பெருக்கிக் கொள்ளுங்கள்.

வேளூர் கிராம முதியோர் கல்வி சங்கம்

செங்கம் தாலுக்கா வேளூர் கிராம முதியோர் சங்க ஆண்டு விழா 27-11-'51 செவ்வாய்க்கிழமை இரவு 9 மணிக்கு டெபுடி தாசில்தார் திரு. ஆர். ராஜாமணி எம்.ஏ., அவர்கள் தலைமையில் கூடியது. அவ்வமயம் முதியோர் கல்வி பயிலும் திரு. என். ஜீ. ராமசாமி அவர்களால் கடவுள் வாழ்த்து பாடப்பட்டது. தலைவர் முன்னுரைக்குப் பின் நடனம் பெண் பிள்ளைகளாலும், அறிவு, சுகாதாரம், கூட்டுறவு முறை, கல்வியின் பயன், சேரிடம் அறிந்து சேர், புலவர்களின் வாய்த்திறமை, படியாத மக்கள் படும்பாடு எனும் விஷயத்தைப்பற்றி மாணவர்கள் விளக்கமாகக் கூறினர்கள்.

பின்பு இரவு 9-30 மணிக்கு "வேதனைக் குரல்" என்னும் நாடகத்தை, முதியோர் கல்வியில் பயிலுபவர்கள் சிறப்பாக நடத்திக் காட்டினர்கள்.

பின் செங்கம் ரேஞ்சு, அரசாங்க பள்ளி கண்காணிப்பாளர் திரு. ஏ. சுப்ரமண்யம், பி.ஏ., எல்.டி., மற்றும் பலர் கல்வியின் அவசியத்தைப்பற்றியும், கூட்டுறவின் அமைப்பைப் பற்றியும், விவசாயத்தின் விளக்கத்தைப்பற்றியும், மிக விரிவாக பேசினர்கள். தானியப்பாடி உதவி ஆசிரியர் திரு. ஆர். முனிசாமி கல்வியின் அவசியம் என்பதைப்பற்றி விரிவாக பேசிமுடித்தார்.

பிறகு தலைவர் அவர்கள் தம்முடைய முடிவுரையில் ஒவ்வொரு கிராமத்திலும் இப்படிப்பட்ட முதியோர் பள்ளி அவசியம் ஏற்பட வேண்டுமெனவும், அதற்கு பெற்றோர்களும், சர்க்காரும், உதவிபுரிவது அவசியம் என்றும் இந்த நாட்டில் யாவரும் படித்த மக்களாக இருக்கவேண்டுமென்பது சர்க்கார் கொள்கையென்றும், அதற்கு பெற்றோர்களின் ஒத்தாசை மிக அவசிய மென்றும் எல்லாவற்றிற்கும் சர்க்காரையே நம்பி இருக்கலாகாது என்றும், குறிப்பாக இப்போது நாடகத்தில் என். ஜீ. ராமசாமி, எல். கட்டையன், கன்னியப்பன், பொன்னுசாமி இவர்கள் நடிப்பு பாராட்டத் தக்கதென்றும், வாய்ப் பேச்சில் அறிவு என்னும் விஷயத்தைப்பற்றி பேசிய மாணவி, குப்புவைப்போல் எல்லோரும் பேச முயற்சிக்க வேண்டுமெனவும், கிராம ஒற்றுமை மிக அவசியம் எனவும், கூறி முடித்தார்.

கிராமத்தின் முதியவர் சங்க சார்பில் திரு. என். ஜீ. ராமசாமி கவுண்டர், அவர்களால் எல்லோருக்கும் நன்றியறிதலை தெரிவித்தபின், "ஜன கண" என்ற தேசிய கீதத்தோடு கூட்டம் இனிது கலைந்தது.

முதியோர் எழுத்தறிவிப்பு நிலையங்கள்

அரசாங்க அறிக்கை

நம் மாகாணத்தில் ஸ்தல ஸ்தாபனங்கள், தங்களுடைய பிரதேசங்களில் 1936 முதியோர் எழுத்தறிவிப்பு நிலையங்களை மேற்கொண்டு ஏற்படுத்தியிருக்கின்றன; இப்பொழுது 2566 எழுத்தறிவிப்பு நிலையங்கள் இருக்கின்றன.

கும்பகோணம் முதியோர் கல்வி நிலையம்

சென்ற 28-11-'51 புதன்கிழமை மாலை 6-30 மணிக்கு முதியோர் கல்வி நிலைய சார்பில் ஹிந்தி மாணவர் சங்கக் கட்டிடத்தில் முதியோர் எழுத்தறிவு தேர்வுப் பத்திரம் வழங்க ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு நகர கல்வி அதிகாரி திரு. ஆர். பாலகிருஷ்ணன் அவர்கள் தலைமைவகித்தார்கள். திரு. எஸ். எஸ். சாலிஹா, திரு. எம். வி. நரசிம்மாச்சாரி, திரு. டி. வி. ராமசாமி முதலியவர்கள் பேசியபின் தலைவர் அவர்கள் முதியோர் எழுத்தறிவு தேர்வு பத்திரம் வழங்கி படிக்காத முதியவர்கள் ஏன் படிக்கவேண்டும் என்பதைப்பற்றி பல உதாரணங்களை எடுத்துக் காட்டி பேசினார்கள். பின் ஆசிரியர் அவர்கள் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது முடிந்தது.

சேலம் முதியோர் கல்வி நிலையத்திற்கு நமது தலைவர் விஜயம்

சேலம் பொன்னம்மாப்பேட்டையிலுள்ள, ஆண், பெண் ஆகிய இரு முதியோர் கல்வி பாடசாலைகளுக்கும், தென்னிந்திய முதியோர் கல்விச் சங்க தலைவரான திரு. கே. எஸ். ராமசாமி சாஸ்திரியார் விஜயம் செய்து, 'முதியோர் கல்வியின் அவசியத்தையும், பொது மக்களின் கடமைகளையும்' பற்றி எடுத்துரைத்தார்.

மேலும் திருச்சி திரு. வெங்கடராமாநுஜலு, திரு. சந்திரசேகரம் பிள்ளை, திரு. எஸ். வி. லட்சுமணன் ஆகிய கல்வி அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

முதியோர் கல்விச்சாலை திறப்பு விழாக்கள்

ஆயக்காரம்பலம் 2-வது சேத்தி 'கலைமகள்' உயர்தர தொடக்கப் பள்ளியில் அரசாங்க அனுமதி பெற்று 1-12-'51-ல் முதியோர் கல்விச்சாலை மானேஜர் திரு. எஸ். சாம்பசிவன் தலைமையில் திறக்கப்பட்டது. இப்பள்ளியில் 19 முதியோர்கள் சேர்ந்து படித்து வருகிறார்கள்.

தாராபுரம் தாலுக்கா உத்தமபாளையம் கிராமத்தில் 6-12-1951 இரவு 8 மணிக்கு சென்னை மாநில கிராம நல உதவி செயலாளர் திரு. எஸ். லெட்சுமிதரன் பாரதியால் உத்தமபாளையம் போர்டு பாடசாலை கட்டிடத்தில் முதியோர் கல்வி பாடசாலை ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முதியோர் கல்வியின் அவசியத்தைப் பற்றி வெள்ளகோவில் பிர்க்கா, கிராமநல அதிகாரி திரு. கே. சிவானந்தம், கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. பி. நடராஜன் ஆகியோர் பேசினார்கள்.

பிறகு மேற்படி போர்டு பாடசாலை தலைமை ஆசிரியர் திரு. வி. ரங்காராஜன் நன்றி கூறி கூட்டம் இனிது முடிவுற்றது.

அகில மலபார் மூன்ருவது முதியோர் கல்வி தொண்டர்கள் மகாநாடு

அகில மலபார் முதியோர் கல்வி தொண்டர்கள் மகாநாடு, கோழிக்கோட்டில் 18-11-51 மாலை முன்னாள் 'மாத்ருபூமி'யின் ஆசிரியரான திரு. தாமோதர மேனன் தலைமையில் நடைப்பெறறது. முன்னாள் மதுரை கலெக்டர் திரு. என். பி. கிருஷ்ண நாயர் மகாநாட்டை திறந்து வைத்தார். இவர்கள் முதியோர் கல்வியின் அவசியத்தைப்பற்றி வற்புறுத்தினுர்கள்.

அவ்வமயம் தமிழ் நாடு, மலபார் பிரந்திய முதியோர் கல்வி அதிகாரியுமான திரு. பெருமாள், திருமதி பாருகுட்டியம்மாள், தென்னிந்திய முதியோர் கல்விச் சங்க நிர்வாகக் காரியதரிசி திரு. தி. ஜ. ரா. கோபால் ஆகியோர்கள் கலந்துக்கொண்டார்கள்.

திரு. கிருஷ்ணன் குட்டி நாயர் அவ்வாண்டு அறிக்கையை சமர்ப்பித்தார். திரு. ஈ. ராமன் மேனன் பிரதிநிதிகளை வரவேற்றுர். மகாநாட்டில் தொண்டர்களின் ஊழியத்திற்கு அரசாங்கம் கொடுத்துவரும் ஊழியத்தை அதிகம் அளிக்க வேண்டுமென்றும், முதியோர் கல்வி இயக்கத்தை உத்தியோகப் பற்று அற்ற குழுவிடம் ஒப்படைக்கவேண்டுமென வென்றும், அடுத்த எட்டாவது தென்னிந்திய முதியோர் கல்வி மகாநாட்டையும், இரண்டாவது முதியோர் கல்வி அரங்கையும் கேரளத்தில் நடத்தப்பட வேண்டுமென்றும் பல தீர்மானங்கள் நிறைவேறின.

கடைசியில் காரியதரிசி வந்தனம் கூற கூட்டம் சிறப்புற முடிவடைந்தது.

நிர்வாகக் காரியதரிசி சுற்றுப்பிரயாணம்

அகில மலபார் முதியோர் கல்வி தொண்டர் கழக பொதுக் காரியதரிசி திருவாளர் எம். கிருஷ்ணன்குட்டி நாயருடன், தென்னிந்திய முதியோர் கல்வி நிர்வாகக் காரியதரிசி திரு. தி. ஜ. ரா. கோபால் அரசியலாரின் பெண முதியோர் கல்வி பயிற்சி சாலையையும், முனிஸிபாலிட்டியால் நடத்தப்படும் அச்சுதன் பெண் உயர்தரப் பள்ளியின் முதியோர் கல்வி நிலையத்தையும் 19-11-51-ல் பார்வையிட்டு, முதியோர் கல்வியின் அவசியத்தைப்பற்றி பேசினுர்.

அன்று மாலை அகில மலபார் முதியோர் கல்விச் சங்க சார்பில் நடைபெறும் மாதிரி கல்லாய் முதியோர் கல்வி நிலயத்தைப் பார்வையிட்டார். முதியோர் கல்வி அதிகாரி திரு. பெருமாளும் வந்திருந்தார்.

வெள்ளேயிலுள்ள முதியோர் கல்வி நிலையத்திற்கு திரு. பெருமாளும, நிர்வாக காரிய தரிசியும் திடீரென விஜயம் செய்து அங்கு நடக்கும் காரியங்களை சிலாகித்துப் பேசினுர்கள்.

20-11-51-ல் திரு. தி. ஜ. ரா. கோபால் நிர்வாகக் காரியதரிசி, வாணி விலாஸ் முதியோர் கல்விநிலையம், திருமதி ஸரோஜினி முதியோர் கல்வி நிலையம், திருமதி கஸ்தூரி பாய் முதியோர் கல்வி நிலையம் ஆகியவற்றை பார்வையிட்டார். இவைகள் படகாரா என்னுமிடத்தில் பெண்களுக்காக நடத்தப்படும் முதியோர் கல்வி நிலையங்கள். அன்று மாலை குரும்பர் நாடு தாலுக்கா முதியோர் கல்விச் சங்கத்தின் சார்பாக மெப்பேல் என்னுமிடத்தில் ஆண்களுக்காக ஆக்கப்பட்ட முதியோர் கல்வி நிலையத்தை ஆரம்பித்து வைத்தார். இரவு தென்னிந்திய முதியோர் கல்வி அரங்கின் படத்தை படகாரவிலுள்ள சினிமா கொட்ட கையில் காட்சி காண்பிக்கப்பட்டது.

திரு. தி. ஜ. ரா. கோபால், திருச்சூர், எர்ணுகுளம், மட்டாஞ்சேரி, பாலக்காடு, பொள்ளாச்சி முதிலிய இடங்களுக்குச் சென்று 26-11-'51-ல் சென்னை திரும்பினுர்.

சந்தா விகிதம்

		ரூ.	அ.
வருட சந்தா	...	2	0
தனிப்பிரதி	...	0	2

விளம்பர விகிதத்திற்கு எழுதவும்.

முதியோர் கல்வி
2/21, முதல் லேன் பீச் ரோட்,
சென்னை-1.

இரண்டாம் பகுதி

பதினேழாம் பாடம்

அ ப் ப ம்

அ	அணு	எண்ணம்	ஆ
	ஆடு	ஊக்கம்	
இ	ஈ	ஐக்கியம்	ஈ
	உமி	ஒப்பம்	
உ	ஓசை	ஔவை	ஊ
எ	துன்பம் ஆகாது		ஏ
ஒ	ஆலமர விழுது		ஓ
	இன்பம் உண்டு		

ஐ ஔ ஃ

ஆசிரியர் இல்லாமல் கல்வி கற்கலாம்
நீயும் படித்தல் அவசியம்
ஆசை கொண்டால் அனைத்தும்
வந்துவிடும்

பதினெட்டாம் பாடம்

ஊ ஞ் ச ல்

ஞ	இஞ்சி	மஞ்சள்	ஞா
	ஞானி	ஞாயிறு	
ஞி	புஞ்சை	கஞ்சி	ஞீ
	நஞ்சை	வஞ்சனை	
ஞு	பஞ்சு	பஞ்சம்	ஞூ
	ஞாயிற்றுக்கிழமை		
ஞெ	படித்த ஞானி		ஞே
	புஞ்சை நிலம்		
ஞொ	காணி தஞ்சை		ஞோ
	தஞ்சாவூர் பஞ்சு		

ஞை ஞௌ ஞ்

ஞாயிற்றுக்கிழமை ஒழிவு நாள்
படித்த ஞானியிடம் சேருவோம்
வஞ்சனையில்லாமல் உழைப்போம்

படிக்கும் தொண்டரின் பெயரும், விலாசமும் } ....

படிப்பிப்பவரின் பெயரும், விலாசமும் } ....

பத்தொன்பதாம் பாடம்

மா ங் காய்

ங	குரங்கு பனங்காய் தேங்காய் நுங்கு	ஙா	
ஙி	பங்குனி தங்கு சங்கு வாங்கு	ஙீ	
ஙு	தங்கை தேங்கு	ஙூ	
ஙெ	நுங்கு விழுது பங்குனி மாதம்	ஙே	
ஙொ	சங்கு ஊது தங்கை வீடு பணம் வாங்கு	ஙோ	

ஙை ஙௌ ங்

பங்குனி மாதத்தில் முதல்
புத்தகத்தை முடி
இரண்டாம் புத்தகம் சீக்கிரம்
முடிக்கலாம்
தினசரிப் பத்திரிகை வாங்கிப்
படிக்கலாம்

வடமொழி எழுத்துக்கள்

ஜ		ஜா
ஜி	ஜ ஸ ஷ	ஜீ
ஜு		ஜூ
ஜெ	க்ஷ ஹ	ஜே
ஜொ		ஜோ

ஜை ஜௌ ஜ்

ஜனவரி ரஸம்

விஷம் பக்ஷணம்

ஹனுமான்

<u>மூன்ரும் பகுதி</u>

படியாத பட்டுசாமி

[இந்த சிறு நாடகம் திரு. கோவிந்தசாமி, காரியதரிசி ஜிஞ்ஜி தாலுக்கா, முதியோர் கல்விச் சங்கம், தென்ஆற்காடு ஜில்லா, அவர்களால் எழுதப்பட்டது. புதிதாக படித்தவர்கள் சுலபமாக இதை படிப்பது மல்லாது, நாடகமாக நடிக்கவும் உதவும்—ஆசிரியர்.]

சீன் 7

இடம்—நாட்டாண்மைதார் வீடு—பட்டுசாமியும். குப்பாயியும் வருகிருர்கள்.

நாட் :—என்னடா பட்டு. என்ன சமாச்சாரம். பெண்டாட்டியையும் கூட இட்டு வந்திருக்கிருயா என்ன விசேஷம்.

குப்பாயி :—ஒரு புடவைக்காரன் வந்தாங்க, ஆறே முக்கால் ரூபாயுக்கு ஒரு புடவை வாங்கிக்கினு பத்து ரூபா நோட்டு கொடுத்தங்க. அவன் ஒரு ரூபா கொறவா குடுத்துட்டு பூட்டாங்க எனக்கு கணக்குத் தெரியாம விட்டுட்டங்க.

நாட் :—ஓஹோ, எண்டா பட்டு சாமி நான் சொன்னு நீ கேக்கல, படிக்கத் தெரியாதவன பலபேரு ஏமாத்துவாண்டா, மற்றவர்களைப் போல நீயும் உன் பெண்டாட்டியும், கொஞ்சம் படிச்சிருந்தா இந்த கஷ்டமெல்லாம் வராது.

குப்பாயி :—நானு சொன்னு இவரு கேக்க மாட்டாருங்க. படிக்கறதுக்கு வெட்கமாயிருக்குதாம். சின்ன பயலுங்க இவர கேலி பண்ணுவாங்களாம்.

பட்டு :— இனிமே எங்களுக்குப் படிப்பு வராது அந்த புடவகாரன கூப்பிட்டு கொஞ்சம் விசாரிங்க.

நாட் :—சரி இன்னம் உனக்கு புத்திவல்ல. இன்னும் பட்டாதான் தெரியும். நீங்க போங்க. அவன கூப்பிட்டு விசாரிக்கிறேன்.

[பட்டுசாமியும், குப்பாயும் போகிருர்கள்]

சரி அந்த புடவை விக்கரவனைக் கூப்பிடு. [புடவைக்காரன் வருகிருன்]

ஏம்பா அந்த குப்பாயி புடவை வாங்கிக்கினு பத்து ரூபா நோட்டு கொடுத்தா ஒரு ரூபா குறச்சி கொடுக்கலாமா அவள் படிக்கத் தெரியாம இருந்தா ஏமாத்தலாமா?

புடவை :—இல்லீங்க சில்லரையாயிருந்ததில் கணக்கு உட்டுப் போச்சிங்க.

நாட் :—இனிமேல் இந்த ஊர்ல அதப்போல காரியம் செல்லாது. இன்னும் இரண்டொரு வருஷத்தில அநேகமா எல்லோரும் படிச்சிடுவாங்க. உன்னுட்டம் ஏமாத்தர ஆளுங்க வாயில மண்ணுதான். நீ குப்பாயிக்கு ஒரு ரூபா கொடுக்கனும். படிக்காதவனை ஏமாற்றியதற்காக இந்த ஊர் முதியோர் கல்வி சங்கத்திற்கு ஐந்து ரூபா கொடுக்கணும். ஆறு ரூபா கொடுத்துட்டு இனிமே ஏமாத்தாத வியாபாரம் பண்ணணும்.

புடவை :—நீங்க சொல்ர படியே செய்ரங்க. (பணம் கொடுத்துவிட்டு) நான் போய் வரனுங்க.

நாட் :—சரி நான் சொன்னது ஞாபக மிருக்கட்டும்.

[போகிருர்]